ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



"कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन।"

தொகுதி 1 | காளயுக்தி ஸூ | ஐப்பசி மீ | அக்டோபர் '78 | பகுதி 1

ஒவ்வொருவரும் தங்கள் இயக்கத்தை—ஸம்ப்ரதாயத்தை—உயர்த்தவும் முன்னேற்றவும் பல வழிகளிலும் பாடுபடுகின்றனர். அதற்குப் பலவித சாதனங்களைக் கையாள்கின்றனர். அச் சாதனங்களுள் தலையான சாதனம் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள பத்திரிகைத் துறையே. தற்போது தமிழ் நாட்டில் பெருகியுள்ள பத்திரிகைகள் பலப்பல. ஒவ்வொரு துறைக்கும் பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. ஒவ்வொரு ஸம்ப்ரதாயத்தினரும் தங்களுக்கென்று பல பத்திரிகைகள் நடத்தி வருகின்றனர்.

நமது தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்திற்காக ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி நடத்திவரும் "ஸ்ரீராமாநுஜன்" பத்திரிகையும், ஸ்ரீ உ. வே. வித்வான் ஏஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி நடத்திவரும் "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்" பத்திரிகையும் ஸ்ரீவைஷ்ணவ வுலகுக்கு செய்துவரும் பேருபகாரம் எழுத்தால் வடிக்கவொண்ணாது.

எனினும் வைணவத்தைப் பற்றி எழுத வேண்டுமென்ற ஆர்வமுள்ளவர்கள் அனைவருக்கும் இப்பத்திரிகைகள் மட்டும் போதுமானதாக இல்லை. மேலும் வைணவ ஸம்ப்ரதாயத்தில் உபயோகப்படுத்தப்படும் பரிபாஷை என்கிற (வடமொழியும் தமிழ் மொழியும் கலந்த) பாணி தற்போது லௌகிகத்தில் இருக்கும் பலருக்குப் புரிவதில்லை.

எனவே இதுவரை நம் ஸம்ப்ரதாயத்தைப் பற்றி அதிக மாகத் தெரிந்து கொள்ளாதவர்கள் இனியாவது கூடிய வரை விஷயங்களை, விவரங்களைத் தெரிந்து கொள்வதற்காக எளிய இனிய தமிழ் நடையில் ஒரு பத்திரிகை ஆரம்பிக்க வேண்டுமென்ற அவா நமக்குப் பல நாட்களாகவே இருந்து வந்தது. அதன் பயனாகப் பிறப்பதே கீதாசார்யன் எனும் மாதப் பத்திரிகை.

பற்பலரும் விரும்பிப் படிக்கும் வகையில் பல பகுதிகள் இப்பத்திரிகையில் இடம் பெறும். ஒவ்வொரு மாதமும் அம் மாதத்தில் அவதரித்த ஆழ்வார்கள் அல்லது ஆசாரியர்கள் வரலாறு (வைபவம்) எளிய தமிழ் நடையில் இடம் பெறும். ஒவ்வொரு இதழிலும் ஒரு திவ்ய தேசத்தைப் பற்றின விவரங்கள் அந்த திவ்ய தேசத்து எம்பெருமான் திரு வுருவப் படத்துடன் (Photo) வெளியிடப்படும். ஸ்ரீ உ. வே. மஹாவித்வான்கள் P. B. அண்ணங்கராசார்யர் ஸ்வாமி, வேளுக்குடி வரதாசாரியர் ஸ்வாமி, ஸ்தலசயனத் துறைவார் ஸ்வாமி, Dr. V. V. ராமானுஜம், சாண்டில்யன் முதலியோரது கட்டுரைகள் இடம் பெறும். மற்றும் பலரும் எழுதுவர்.

மேலும் புதிதாக எழுதக் கூடிய இளைஞர்களை ஊக்குவித்து அவர்களது கட்டுரைகளும ப்ரசுரிக்கப்படும். மேலும் பல சுவை யான, புதுமையான பகுதிகளுடனும் விஜயதசமி (11-10-78) அன்று வெளியிடப்படும் இப்பத்திரிகை முழுக்க முழுக்க இளை ஞர்களாலேயே நடத்தப்படுகிறது. இப்பத்திரிகை பக்தர்களின் பேராதரவைப் பெற்று விளங்க வேண்டுமென்று கீதாசார்யனான ஸ்ரீபார்த்தஸாரதிப் பெருமானின் திருவருளை வேண்டுகிறோம்.

திருவல்லிக்கேணி

சிரோமணி வித்வான். சொல்வேந்தர் பிள்ளைலோகம்
ஸ்ரீ. உ. வே. ஸ்தலசயனத் துறைவார் ஸ்வாமி

திருவல்லிக்கேணி : திரு அல்லிக் கேணி. இவ்வூரிலுள்ள புஷ்கரிணி மிகப் பெருமை பெற்றது. குளத்தின் பெயரையே ஊர் தாங்கி நிற்கிறது. இத்தாமரைக் கேணியைக் 'கைரவிணீ' என்பர். திருவல்லிக்கேணியைக் கைரவிணீ க்ஷேத்திரம் என்று கூறுகிறார்கள். இப்பகுதியைக் கொண்ட நிலப்பரப்பு பெருங் காடாக இருந்தது. பிருந்தாரண்யம் என்று அதற்குப் பெயர். அப்பெயர் இப்போதும் இத்தலத்திற்கு வழங்கப்படுகிறது. ஸ்ரீராமாநுஜரின் தந்தை கேசவஸோமயாஜீ. அவர் கைர விணீக் கரையில் தவஞ் செய்தே ஸ்ரீராமாநுஜரை மகனாகப் பெற்றார். ஸ்ரீ பார்த்தஸாரதியே ராமாநுஜராக அவதரித்தார் என்பது வரலாறு.

ஏன் இந்த மோகம்? : பகவானுக்குக் கடலின் மீது அள வற்ற மோகம்! இறையும் பிரியாமல் இருக்கும் மஹாலக்ஷ்மியை சமுத்திரராஜன் பகவானுக்குக் கொடுத்து உதவினான். பக வான் அவதாரங்களை மேற்கொண்ட போதெல்லாம் கடலர சன் உதவி இருக்கிறான். மத்ஸ்யாவதாரம் எடுத்தபோது நான்மறைகளையும் மீட்க உதவினான். மந்தரமலையை மத்தாகக் கொண்டு கடல் கடைந்தகாலை அமுதத்தைக் கொடுத்து உதவினான். வராஹாவதாரத்தை மேற்கொண்ட போது, இரணியாக்ஷனைக் கொன்று பூமிப்பிராட்டியைத் திரும்பப்பெற உதவினான். ராமனாகப் பிறந்தபோது இராவணனை அழிக்க இலங்கைக்குச் செல்ல அணைகட்டுவதற்கு இடங்கொடுத்தான். கிருஷ்ணாவதாரத்தை ஏறிட்டுக் கொண்டபோது பகைவர்கள் புகாதவாறு அகழியாக நின்று த்வாரகையைப் படைக்க ஸமுத்திர ராஜன் உதவினான். இவ்வாறு பலவகைகளில் தனக்கு உதவிய ஆருயிர் நண்பனை எவ்வாறு மறக்க முடியும்!

அவனை எந்நாளும் குளிரக் கடாக்ஷிக்க வேண்டும் என்ற எண்ணங் கொண்டே ஸ்ரீ பார்த்தஸாரதி அலையார் கடற்கரையில் எழுந்தருளி இருக்கிறான். சொல்லா விட்டாலும் கடலின் மீது இவன் கொண்டுள்ள மோகம் தெரியவில்லையா என்ன!

நல்வழி காட்டும் நல்லொளி : கடலில் செல்வோருக்கு வழி காட்டி, கலங்கரை விளக்கம். கடற்கரையிலிருந்து சில மைல் தொலைவே இது வழி காட்டும். கடலில் செல்வோர் (இரவில்) இதையே பெருந்துணையாக நினைப்பர். ஆனால் உவர்க்கடலை விடப் பெருந்தீங்கு விளைவிப்பது ஸம்ஸாரக்கடல்! உவர்க்கடலைக் கடப்பது எளிது; ஸம்ஸாரக்கடலைக் கடப்பது அரிது. ஆனால் பிறவிப் பெருங்கடலுக்கும் மறுகரை உண்டு! அது தான் பரமபதம்! அந்த பரமபதத்தை அடைவதற்குக் கலங்கரை விளக்காக கடற்கரையில், திருவல்லிக்கேணியில் ஒளிர்பவனே ஸ்ரீபார்த்தசாரதி. உலகில் நல்வாழ்க்கை நடத்தப் பல வழிகளைக் காட்டியவன் பகவான்! கலைகளும் வேதமும் நீதி நூல்களும் அவனால் வழங்கப்பட்டன. நந்தா விளக்காகவும், அணையாவிளக்காகவும் இருந்து கொண்டு, இவ்வுலக வாழ்க்கைக்கு நல்வழி காட்டியாகவும், பிறவிப் பெருங்கடல் கடந்து அக்கரை செல்லத் துணையாகவும் நிற்கும் பேரொளியே ஸ்ரீபார்த்தஸாரதி! இவன் சுடரொளி மூர்த்தி!

கோலச் செந்தாமரைக்கண்ணன் : அறிஞர்கள் எம்பெருமானை அமரர்க்கு அதிபதி என்கின்றனர். ஆழ்வார்களோ 'அருமறை தேடியோடும் அமலன்' என்கின்றனர். 'மறையோர் மறைப்பொருள்' என்று கூறுகின்றனர். ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள். அவன் ஸ்வதந்திரன! அவனது ஆளுகைக்கு உட்பட்டதே இவ்வுலகம்! என்று அனைவரும் சொல்லுகின்றனர். நாமும் அதையே ஆதரிக்கின்றோம்; கூறிக் கொண்டிருக்கிறோம்! இதுதான் உண்மை! சாஸ்திர ஸம்மதம்! ஆனால், பகவான் இவற்றை ஏற்றுக் கொள்ளுகிறானா தன்னை மேம்பட்டவன் என்றோ, ஸ்வதந்திரன் என்றோ நினைக்கிறானா! என்பதை அவனே சொன்னால்தான் தெரியும்! ஆனால், ஒன்று மட்டும்

உறுதி! அவன் தன்னைப் பரதந்திரன், ஸர்வசுலபன், அடியார்க்கு அடியன் என்று காட்டிக் கொள்வதற்காகவே பூமியில் அவதரிக்கிறான் என்று ஆசாரியர்கள் கூறிவிட்டார்கள். அரசகுலத்தில் இராமனைப் பிறந்த காரணத்தால் பகவான் பலரோடு பழக முடியவில்லை போலும்! குறிப்பிட்ட அளவுக்கும் கீழே இறங்கிப் பழகமுடியாமல் போயிற்று! அக்குறை தீரக் கிருஷ்ணவதாரத்தை மேற்கொண்டான். ஆயர் குலத்தில் தோன்றினான்; ஆநிரை மேய்த்தான்; அசோதை சொல் கேட்டான்; ஆய்ச்சியரோடு பழகினான்; பாண்டவர் துணையானான்; தூது நடந்தான்; மா பாரதப்போர் முடிக்கத் தேரோட்டியாகப் பார்த்தனின் தேரூர்ந்தான். கோலச் செந்தாமரைக்கண்ணா! பல திருக்கோலங்களை சாத்திக் கொண்டாலும் எந்நாளும் பார்த்தஸாரதி கோலத்திலேயே இருக்க ஆசையோ! அதனாற்றான் திருவல்லிக்கேணியில் பார்த்தஸாரதியாக கோயில் கொண்டுள்ளனையோ! கண்ணா! உன்னை ஆசையற்றவன் என்று பலரும் கூறுகிறார்களே! ஆசை உன்னையும் விடவில்லையா!

பொலிக பொலிக பொலிக :- ஸ்ரீவைஷ்ணவர்கள் மங்களாசாஸனபரர்கள். மங்களாசாஸனம் (வாழ்த்துதல்) செய்வதற்குத் தகுதியுடையவர்கள்; அது போல் மங்களாசாஸனத்தைப் பெறவும் தகுதியுடையவர்கள். ஆழ்வார்கள் பலதிவ்ய தேசங்களை மறையோர்களால் பெருமை பெற்றவை என்று மங்களாசாஸனம் செய்கிறார்கள். ஸ்ரீ வைஷ்ணவர்கள் நிறைந்து வாழும் அத்தகைய திவ்யதேசங்களுள் திருவல்லிக்கேணியும் ஒன்று. இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்கள் சந்திக்கும் போதே அங்கு பகவான் எழுந்தருளி இருக்கிறான் என்பர் பெரியோர். ஸ்ரீ வைஷ்ணவர்கள் நிரம்பி வாழும் இடத்தில் பகவானும் அவர்களோடு வாழ்கிறான். பகவானை உள்ளபடி அறிய உதவுவதே ஞானம்! ஸ்ரீவைஷ்ணவர்கள் ஞானியர்கள். ‘ஞானியரை விட்டுப் பகவானும், பகவானை விட்டு ஞானியரும் பிரிவது இல்லை’ என்பதை இவ்வூரில் உணரலாம். வாழையடி வாழையாக வாழைக் கன்றுகள் தோன்றி வாழைத் தோட்டத்

தின் பெயரைக் காப்பாற்றுவதுபோல், ஸ்ரீவைஷ்ணவ இளஞ் சிறுர்களால் பொலிவு பெற்றுவரும் ஸ்ரீவைஷ்ணவ குலத்திற்கு (தொண்டக்குலத்திற்கு பல்லாண்டு பாடுவோமாக பொலிக, பொலிக, பொலிக.

ஆழ்வார் கண்ட மூவர்: திருமங்கையாழ்வார் திருவேங் கடமுடையானை மங்களாசாஸனம் செய்து கொண்டிருந்தார். இவரைஸேவிப்பதுபோல், பிராட்டியோடு சேர்ந்திருக்கும் எம்பெருமான்களை ஸேவிப்பது பெரும் பாக்கியம் என்று எண்ணினுர். உருப்பிணியோடு (ருக்மிணிப்பிராட்டியோடு) ஸ்ரீபார்த்தஸாரதி அவருக்கு வேங்கடமலையில் ஸேவை ஸாதித் தான். எண்ணற்கரியதோர் ஏனமாகிய இடவெந்தை எம் பெருமான் ஸ்ரீ பூமிப்பிராட்டியோடு அங்கு ஸேவை ஸாதித் தான். திருக்கோவலூர் ஆயன், முதலாழ்வார்கள் மூவரையும் ஓரிடத்தே சேர்த்துக் கண்டு மகிழ்ந்தான். இவ்வாழ்வார், மூன்று எம்பெருமான்களையும் ஸேவித்து மகிழ்ந்தார். மூவரும் ஸேவை ஸாதித்த ரகசியத்தையும் ஆழ்வார் வெளியிட்டு விட்டார்.

பார்த்தற் காயன்று பாரதம் கை செய்திட்டு வென்ற பரஞ்சுடர்,
கோத்தங்காயர் தம் பாடியில் குரவை பிணைந்த வெங்கோவலன்.
ஏத்துவார் தம் மனத்துள்ளான் இடவெந்தை மேவிய வெம்பிரான்,
தீர்த்த நீர்த்தடஞ்சோலை சூழ் திருவேங்கடமடை நெஞ்சமே!

ஏனத்தினுருவாகி நிலமங்கை எழில் கொண்ட ஞானத்தின் ஒளியுருவே கண்ணனுகத்தோன்றியது. ஸ்ரீ பார்த்தஸாரதி யாக விளங்கிய கண்ணனே ஸ்ரீநிவாஸனுக வடவேங்கட மா மலையில் வந்து நின்றுன் என்ற உண்மையைக் காட்டியுள்ளார்.

விளக்குக்கு இருவிளக்கு: விழுப்பொருளின் மேல் இருக் கும் விளக்கு எம்பெருமான். பொய்கையாழ்வார் அவனுக்கு அருகில் கதிர் விளக்கை ஏற்றி வைத்தார். பகவானுக்கு ஒரு பக்கத்தில் மட்டும் விளக்கு ஏற்றிவைத்தால் பயனில்லை! மறு பக்கத்திலும் ஒரு விளக்கை ஏற்றி வைக்க வேண்டும் என்று

பூதத்தாழ்வார் நினைத்தார்; தேடினார். ஞானமாகிற சுடர் விளக்கை ஏற்றிவைத்தார். பெருமாள் ஸன்னதியில் விளக்கேற்றினால் லக்ஷ்மி கடாக்ஷம். உடனே லக்ஷ்மி கடாக்ஷித்தாள். மஹா லக்ஷ்மி கடாக்ஷித்ததைப் பேயாழ்வாரே முதலில் கண்டார். 'திருக்கண்டேன்' என்று பாடத் தொடங்கினார்.

பகவான் இராமனாகப் பிறந்தபோது தனக்கு அவன் உயிர்ப்பிச்சை அளித்ததை ஸமுத்திர ராஜன் மறக்கவில்லை; நன்றியுள்ளவன். லோக நாதனை ஸ்ரீபார்த்தஸாரதிக்கு திரைக்கையால் திறை (கப்பம்) கொணர்ந்து குவிக்கிறான். ஒரு பக்கம் பவழக்குவியல் மறுபக்கம் முத்துக்குவியல்! இவ்விருகுவியல்களும்! ஒளியுமிழும் இரண்டு விளக்காக இருக்கின்றன. ஸமுத்திர ராஜன் மாலைக்காலத்தில் ஸ்ரீபார்த்த ஸாரதிக்கு ஏற்றும் அந்தி விளக்குகள் இவை. இவ்விளக்கொளியில் வாழ்வதையே ஸ்ரீபார்த்தஸாரதி விரும்புகிறானே!

வந்துதைத்த வெண்டிரைகள் செம்பவள வெண்முத்தம்
அந்தி விளக்கு மணி விளக்காம் — எந்தை
ஒரு வல்லித்தாமரையாள் ஒன்றிய சீர் மார்பன்
திருவல்லிக்கேணியான் சென்று.

(மூன். திருவந்தாதி. 16)

அகடித கடநா ஸாமர்த்தியம் :— பகவான் ஸர்வாதிகன், ஸர்வசக்தன், (எல்லாம் வல்லன்) ஸமர்த்தன். அவன் வலிமை மிக்கவன்; அவனுடைய தோள்வலிமைக்கு உபய விபூதியும் (இவ்வுலகமும் அவ்வுலகமும்) சிற்றிடமாகவே தோன்றுகிறது. ராமாவதார காலத்தில் ஒருவனாகவே கரதூஷணர் பதினாலாயிரம் பேர்களை அழித்தது, இராவணனை அழித்தமை, கிருஷ்ணனாக இருந்து கோவர்த்தனமலையைக்குடையாகப் பிடித்தமை ஆகியவற்றை எல்லாம் அகடித கடநாஸாமர்த்தியம் (செயற்கரிய செய்தல்) என்று சிலர் நினைக்கின்றனர். அதுசரியன்று. அவனது வலிமையோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது அச்செயல்கள் மிகச்சிறியவையே! மனிதனுக்குப் பலகுணங்கள் இருக்

கின்றன. அன்பும் சினமும் குணங்களே! அன்பு இருக்கும்போது கோபம் தோன்ருது. கோபம் தோன்றிஞல் அன்பு மறைந்து போம். ஒரு குணம் ஓங்கும்போது மற்ருெருகுணம் தலைமடிந்து போம். இரு குணங்களும் ஒரேநேரத்தில் சமமாக விளங்குவதில்லை. பகவான் நரங்கலந்த சிங்கமானுன். ஒரே சமயத்தில் இரணியன் மீது கோபம்; ப்ரகலாதன் மீது அன்பு! இப்படிப் பட்ட செயலே அகடித கடநா ஸாமர்த்தியம் என்று கூறுவர்.

எம்பெருமானிடம் மேன்மை விளங்கும் போது ஸௌலப்யம் (எளிமை) பிரகாசிப்பதில்லை; ஸௌலப்யம் விளங்கும் போது மேன்மை ஒளியடங்கி நிற்கிறது. திருமங்கையாழ்வார் ஸ்ரீபார்த்தஸாரதியிடம் பரத்வமும் ஸௌலப்யமும் இணைந்து விளங்குவதைக் கண்டார். அடியார்களுக்கு ஸேவை ஸாதிக்க வேண்டுமென்றே காத்திருக்கும் பார்த்தஸாரதியைக்கண்டு வணங்கி உய்வு பெறுங்கோள் என்கிருர்.

ஸ்ரீபார்த்தஸாரதி, ஸ்ரீய:பதி, பூமிநாயகன், நீளாதேவியாகிய நப்பின்னைக்கு மணுளன். மூவருக்கும் துணைவன்; நமக்கு எந்நாளும் துணையாக இருப்பவன். ருக்மிணிப்பிராட்டியோடு எழுந்தருளி இருக்கிருன். அதேநேரத்தில் அன்பர்க்கு ஆளாகி உழைப்பவன் என்பதைக் காட்டிக் கொண்டு தேரோட்டி நிலையில் காட்சியளிக்கிருன். இப்படிப்பட்ட குலநாதனைத் திருவல்லிக்கேணியில் காண்கிறேன் என்கிருர்.

இன்துணைப்பதுமத்தலர் மகள் தனக்குமின்பன்
நற்புவி தனக்கிறைவன்
தன்துணையாயர் பாவை நப்பின்னை தனக்கிறை
மற்றையோர்க் கெல்லாம் வன்துணை
பஞ்சபாண்டவர்க்காகி
வாயுறை தூது சென்றியங்கும் என்துணை
எந்தைதந்தை தம்மானைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

பெரியதிருமொழி 2-3.5

ஈடு இணையற்றது :— நூற்றெட்டு திவ்ய தேசங்கள் சிறந்தவை; அவற்றுள் கோயில், திருமலை, பெருமாள் கோயில் மிகச்சிறந்தவை. திருவல்லிக்கேணி மிகவும் சிறந்த திவ்ய தேசம்! மந்நாதன் (ரங்கநாதன்) இங்கு கோயில் கொண்டுள்ளான். திருவேங்கடமுடையானே ஸ்ரீவேங்கட கிருஷ்ணனாக ஸேவை ஸாதிக்கிறான். கஜேந்திர வரதன் எழுந்தருளி இருக்கிறான். ஆதலால் கோயில், திருமலை பெருமாள் கோயில் ஆகிய மூன்று திவ்ய தேசத்து எம்பெருமான்களையும் தன்னிடம் கொண்ட ஒரே திவ்ய தேசம் திருவல்லிக்கேணி! ஈடு இணையற்றது!

புகழ்க; பாராட்டுக :— பகவத்கைங்கர்யங்களில் ஈடுபட்டு விளங்க வேண்டுவது கடமை. இப்படிப்பட்டவர் யாராக இருந்தாலும் பாராட்டத்தக்கவரே. எத்தனையோ ஜன்மங்களுக்குப் பிறகு தான் ஒருவனுக்குப் பகவானிடம் பக்திஏற்படும். பக்தியை வளர்த்துக் கொண்டு பக்தனாக மாறுகிறான். பக்தி கைங்கர்யத்தில் கொண்டு விடுகிறது. கைங்கர்யச்சுவையை நுகர்ந்தவன் மற்றொன்றை விரும்பான். தொண்டைமான் சக்ரவர்த்தி ஸ்ரீவைஷ்ணவத்தில் ஊன்றியவன்; பல்லவஅரசன். அவனே ஸ்ரீபார்த்தஸாரதி ஸன்னிதியில் பெரும் பகுதிகளைக் கட்டினான்; மண்டபம் மதில்களை அமைத்தான். இவ்வாறு மிகச்சிறந்த கைங்கர்யம் செய்தவனைத் திருமங்கையாழ்வார் இவ்வூர்ப்பதிகத்தில் குறிப்பிட்டுப் புகழ்ந்திருக்கிறார்.

'மன்னுதண் பொழிலும் வாவியும் மதிளும்
மாட மாளிகையும் மண்டபமும்
தென்னன் தொண்டையர் கோன் செய்த நன்மயிலைத்
திருவல்லிக்கேணி'

என்று கூறியுள்ளார். நல்லவர்களைப் பாராட்டுவதும், அவர்களது உண்மைப் புகழைக் கூறிப் பெருமைப் படுத்துவதும் பெரியோர்கள் காட்டிய வழியாகும். நல்லவரைப் புகழ்வோம் நற்செயல்களைப் பாராட்டுவோம்.

—o—

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

திருவல்லிக்கேணியைப் பற்றி . . . .

" ஆழ்வான் "

★ ஆழ்வார்கள் பாடியதால் சிறப்பைப் பெற்ற 108 வைணவ திவ்ய தேசங்களுள், தொண்டை மண்டலத்தில் அமையப்பெற்ற திருவல்லிக்கேணியும் ஒன்றாகும். இது பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகிய மூன்று ஆழ்வார்களின் பாடல் பெற்ற தலம்.

★ திருவல்லிக்கேணி, தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாவட்டத்தில், சென்னை சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன் நிலையத்திலிருந்து தெற்கே இரண்டு மைல் தூரத்திலும், எக்மோர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கிழக்கே இரண்டு மைல் தூரத்திலும் வங்காள விரிகுடாக் கடலோரத்தில் அமைந்துள்ளது.

★ திரு-அல்லி-கேணி — அழகிய அல்லி மலர்கள் நிரம்பிய குளத்தை உடைய ஊராகையினால் திருவல்லிக்கேணி எனப் பெயர் பெற்றது. இதை சம்ஸ்கிருத மொழியில் 'கைரவிணீ' என அழைப்பர்.

★ திருவல்லிக்கேணியின் புராணப் பெயர் 'பிருந்தாரண்யக்ஷேத்ரம்' என்பதாம். அதாவது ஸ்ரீமந் நாராயணனுக்கு உகந்த, துளசிச் செடிகளையுடைய காடு என்பதாம்.

★ திருவல்லிக்கேணியில் அமைந்துள்ள கோயிலினுள் எட்டாம் நூற்றாண்டில் அரசாண்ட தந்திவர்மன் என்ற பல்லவ மன்னனின் கல்வெட்டுக்கள் காணப்படுவதால், இக் கோயில் எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னரே கட்டிய கோயிலாக கருதப்படுகிறது.

★ இத் திருவல்லிக்கேணிக் கோயிலில், பார்த்தசாரதி (மூலவர் : வேங்கடகிருஷ்ணன்), நரஸிம்மர், ரங்கனாதர், ராமர், கஜேந்திர வரதர் ஆகிய ஐந்து எம்பெருமான்களின் சன்னதிகள் தனித்தனியே உள்ளன.

★ மேலும், ரங்கனாதருக்காக வேதவல்லித் தாயாரும் பார்த்தசாரதிக்காக ஆண்டாளும் இக் கோயிலில் தனித்தனி ஸன்னதிகளில் எழுந்தருளியுள்ளனர்.

★ எம்பெருமான்களை மங்களாசாசனம் செய்வதற்காக பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், என்னும் (ஆண்டாளுடன் சேர்த்து), பன்னிரு ஆழ்வார்களும், நாதமுனிகள், ஆளவந்தார், திருக்கச்சி நம்பிகள், இராமநுஜர், கூரத்தாழ்வான், முதலியாண்டான், எம்பார், பிள்ளைலோகாசாரியார், மணவாளமாமுனிகள், வேதாந்த தேசிகன் என்னும் ஆசாரியர்களும் இக் கோயிலில் எழுந்தருளி உள்ளனர்.

★ இக் கோயிலில் எழுந்தருளியுள்ள ஆழ்வாராசாரியர்கள் அனைவருக்கும் மாத திரு நக்ஷத்ரங்களும், வருட திருநக்ஷத்ரங்களும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. பேயாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், ஆண்டாள், ராமாநுஜர், மணவாளமாமுனிகள் ஆகியோருக்கு நாலாயிரமும் ஸேவித்து பத்து நாட்கள் உத்ஸவம் கொண்டாடப்படுகிறது.

★ புராணங்களின் படி, சுமதி என்ற அரசன் திருமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநிவாசரிடம், தனக்கு கிருஷ்ணனாக சேவை ஸாதிக்க வேணும் என வேண்ட, ஸ்ரீநிவாசரும் திருவல்லிக்கேணியில் அவ்வரசனுக்கு பார்த்தசாரதியாக ஸேவை ஸாதித்ததாகவும் கூறுவதால், இதனை இரண்டாவது திருப்பதி என அழைப்பர்.

★ ருக்மிணிப் பிராட்டியை, அவள் விருப்பத்திற்கு மாருக சிசுபாலனுக்குத் திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்து, ருக்மிணியும் திருமணத்திற்கு முன் அரச முறைப்படி கோயிலுக்குச் சென்று திரும்பி வரும் வழியில், தேரில் வந்த கிருஷ்ணனுல் காப்பாற்றப்பட்டனள் எனவும், அவ்வாறு காப்பாற்றுகையில், கிருஷ்ணனின் தம்பி 'சாத்யகி' தேரின் சாரதியாகவும், கிருஷ்ணனும் ருக்மணிப்பிராட்டியும் தேரின் நடுவிலும், தேரின் பின்புறம், சிசுபாலனின் எதிர்ப்பைச் சமாளிக்க கிருஷ்ணனின் அண்ணுவான பலராமனும் வீற்றிருந்ததாக ஸ்ரீபாகவதம் கூறுகின்றது. இந்த நிகழ்ச்சிக்கேற்ப திருவல்லிக்கேணியில் கிழக்கு திசை நோக்கி எழுந்தருளியிருக்கும் வேங்கட கிருஷ்ணன் வலது புறம் ருக்மிணிப்பிராட்டியுடனும், இடது புறம் சாத்யகியுடனும், ருக்மிணிக்கு வலது புறம் வடதிசை நோக்கி பலராமனும் எழுந்தருளியுள்ளனர். தவிர, தென்திசை நோக்கி கிருஷ்ணனின் மகன் ப்ரத்யும்னனும் பேரன் அனிருத்தனும் எழுந்தருளியுள்ளனர். இவ்வாறு குடும்ப ஸமேதராய் கிருஷ்ணன் ஸேவை ஸாதிப்பது, இத்தலத்திற்கே உரியதான ஒன்ருகும்.

★ அர்சுனனுக்குச் சாரதியாக இருந்த போது, போரில் பீஷ்மர் விட்ட அம்புகளே அர்சுனனுக்காகத் தான் ஏற்றதாகவும், அத்திருக்கோலத்துடனே நேராக குளிர்ந்த சோலேகளேயுடைய ப்ருந்தாரண்யத்திற்கு வந்து இளேப்பாறுவதாகவும் கூறப்படுகிறது. அதை மெய்ப்பிக்க இற்றைக்கும் ஸ்ரீபார்த்தசாரதி (உத்ஸவர்) திருமுகத்தில் பாணங்கள் பட்ட வடுக்களுடன் எழுந்தருளியிருப்பதைக் கண்ணுரக் காணலாம்.

★ அத்ரி மகரிஷியின் தபஸைக் கண்டு உவந்து, நரஸிம்மர் அவருக்கு ஸேவை ஸாதித்து, அவர் விருப்பப்படியே ப்ருந்தாரண்ய க்ஷேத்திரத்தில் நிரந்தரமாக ஸேவை ஸாதிப்பதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

★ பாற்கடலிலே ஸ்ரீமத் நாராயணனுடன் ஊடல் கொண்ட மஹாலக்ஷ்மி கோபித்துக் கொண்டு பெருமாளைப் பிரிந்து, குழந்தை வடிவத்திலே ப்ருகு மஹரிஷியை அடைய ப்ருகு முனிவனும் குழந்தையை வளர்த்து, அழகிய ராஜ ரூபத்திலே வந்த மஹாவிஷ்ணுவுக்கு (ஸ்ரீரங்கநாதர்) மாசித் துவாதசியன்று திருக்கல்யாணம் செய்து வைத்தார் என்ற புராணமும் இத்தலத்திற்கு உண்டு. இற்றைக்கும் மாசித் துவாதசியன்று மன்னாதனுக்கும் வேதவல்லித் தாயாருக்கும் "அம்மி மிதித்தல், அக்னி வலம் வருதல்" முதலிய சகலவித சம்ப்ரதாயங்களுடனும் திருக்கல்யாண உத்ஸவம் நடப்பது குறிப்பிடத்தக்கது.

★ திருவல்லிக்கேணியை முதன் முதலில் பாடிய பேயாழ்வார் "ஒருவல்லித் தாமரையாள் ஒன்றிய சீர் மார்பன்" என்று குறிப்பது வேதவல்லியின் மணாளனை ரங்கநாதனையே; இதை உறுதிப்படுத்த, திருமழிசை ஆழ்வார் "வாளாகிடந் தருளும்......ஐந்தலைவாய் நாகத்தணை" என்று எம்பெருமானை பள்ளி கொண்ட திருக்கோலத்தனாகவே பாடியுள்ளார். இவ்வாறு ஆழ்வார்களுக்குப் பின் அவதரித்த திருமங்கை ஆழ்வார் பத்துப் பரசுரங்களில் ஸ்ரீபார்த்தசாரதி, ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீராமன், ஸ்ரீ அழகிய சிங்கர், ஸ்ரீ வரதர் ஆகிய 5 எம்பெருமான்களையும் மங்களாசாஸனம் செய்கிறார்; எனவே முதலில், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் காலத்தில், ஸ்ரீ ரங்கநாதன் சன்னதியே இருந்தது எனவும், பிறகு, திருமங்கையாழ்வார் காலத்திற்கு முன், மற்ற சன்னதிகள் ஏற்பட்டிக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர்.

★ இக் கோயிலில், எல்லா உத்ஸவங்களும், வைகானஸ ஆகமப்படி, ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரங்களைப் பின்பற்றி நடைபெறுகின்றன.

★ முதல் ப்ரதானப் பெருமாளான ஸ்ரீபார்த்தசாரதிக்கு சித்திரை மாதத்திலும், இரண்டாவது ப்ரதானப் பெரு

மாளான ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ஆனி மாதத்திலும் தனித் தனியே உள்ள த்வஜஸ்தம்பங்களில் கொடியேற்றி, பத்து நாட்கள் ப்ரம்ம உத்ஸவம் நடப்பது இத்தலத்திற்கே உரிய தனிப் பெருமையாகும்.

★ ஆழ்வார்கள் பன்னிருவர்களில் ஒருவரான பேயாழ்வார் அவதார ஸ்தலம் திருவல்லிக்கேணியே எனக் கொள்வதில் தடையேதுமில்லை. திருவல்லிகேணியைப் பாடிய திருமழிசையாழ்வார் "மாமயிலை மாவல்லிக் கேணியான்" என்றும் திருமங்கை மன்னன் "மாடமாமயிலைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே" "நன் மயிலைத் திருவல்லிக்கேணி நின்றான்" என்றும் கூறுவதால் அக் காலத்தில் மயிலை எனும் பகுதியும் திருவல்லிகேணியில் சேர்ந்த ஒன்றாக இருந்திருக்க வேண்டும்.

★ ஆதியமுதமான திருவல்லிக்கேணி எம்பெருமான் கண்டருளும் அமுதிலும் ஆற்ற இனிய சர்க்கரைப் பொங்கலும் திருவல்லிக்கேணிக்கே உரித்தான தனிச் சிறப்பாகும்.

★ மேற்கூறிய சிறப்புக்கள் போதாது என்று, ஆஸ்திகம் குறைந்து வரும் (?) இந்நாளிலும், இத்தலத்து எம்பெருமான்களின் கைங்கர்யங்கள் சற்றும் குறைவின்றி நடப்பது போற்றத் தக்கது. ஞானத்திலும், வயதிலும், அனுபவத்திலும் மூத்தவர்களான பெரியவர்கள் முன்னே நிற்க, 50க்கும் மேற்பட்ட சிறுவர்கள் கற்க வேண்டிய பாசுரங்களைக் கற்றுக் கொண்டு பின்னே நிற்க, நாலாயிரம் கற்றுணர்ந்த நடுவயதினர் நடுவே நிற்க, இன்றைய திவ்யப்ரபந்த கோஷ்டியைக் காண்பது கண் கொள்ளாக் காட்சியாகும்,

—o—

முதலும் முடிவும்

M. A. வேங்கட கிருஷ்ணன்

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம் (இயக்கம்) என்பது திருமால் ஒருவனையே கடவுளாகக் கொண்டு போற்றப்பட்டு வரும் ஸம்ப்ரதாயமாகும். இச் சம்ப்ரதாயத்தை வளர்த்த திருமால் அடியார்கள்—ஆழ்வார்கள் என்றும் ஆசாரியர்கள் என்றும் இருபிரிவாகக் குறிக்கப் படுகின்றனர். அவர்கள் அனைவரும் தென்னாட்டில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் அவதரித்தவர் (பிறந்தவர்) களாவர்.

ஆழ்வார்கள் என்பவர்கள், தங்களுக்கு பகவான் மேல் ஏற்பட்ட பக்தியின் மேலீட்டால் பல பாசுரங்களைப் பாடினர். அப்பாசுரங்களின் தொகுப்பு 'நாலாயிர திவ்யப்ரபந்தம்' என்றும் 'அருளிச்செயல்' என்றும் கொண்டாடப்படுகிறது. ஆழ்வார்கள் தங்கள் புலமையை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றோ அல்லது ஏதாவது பலனைக் கருதியோ பாக்களைப் பாடவில்லை. பகவான் மீது அவர்களுக்குள்ள பக்தி மடைதிறந்தாற்போல் பாசுரங்களாக வெளிப்பட்டன. அவ்வாறு பகவானுடைய பெருமையிலேயே அவர்கள் **ஆழ்ந்தவர்கள்** ஆதலால் ஆழ்வார்கள் எனப்பட்டனர். அத்தகைய ஆழ்வார்கள் 1. பொய்கை ஆழ்வார், 2. பூதத்தாழ்வார், 3. பேயாழ்வார், 4. திருமழிசை ஆழ்வார், 5. நம்மாழ்வார், 6. மதுரகவி ஆழ்வார், 7. குலசேகர ஆழ்வார், 8. பெரியாழ்வார், 9. ஆண்டாள் 10. தொண்டரடிப்பொடி ஆழ்வார் 11. திருப்பாணாழ்வார், 12. திருமங்கை ஆழ்வார் என பன்னிருவராவர்.

ஆசாரியர்கள் என்பவர்கள், ஆழ்வார்களைத் தொடர்ந்து, ஆழ்வார்கள் அருளிய பாக்களிலுள்ள கொள்கைகளை வளர்த்தவர்கள். இவர்கள், தாங்கள் பெற்றிருந்த கல்வியாலும் ஞானத்தாலும் ஆழ்வார் பாசுரங்களில் விளங்கும் கொள்கைகளைத் தழுவியும் விவரித்தும் பல நூல்களை வடமொழியிலும்

தென்மொழியிலும் வழங்கியுள்ளனர். இவ்வாறு, ஆழ்வார்களின் கொள்கைகளை விவரித்த **ஆசிரியர்கள்** ஆசார்யர்கள் எனப்படுகின்றனர். ஆசார்யர்கள் எனும் தொடரானது நாதமுனிகள் என்பவரை முதலாகவும் மணவாள மாமுனிகள் என்பவரை முடிவாகவும் உடையது.

இவ்வாறு திருமால் தொடங்கி - நாதமுனிகள் நடுவாக மணவாளமாமுனிகள் ஈறாகவுள்ள தொடரானது குருபரம்பரை எனப்படுகிறது.

ஆழ்வார்களில் முதல் மூவரான பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியோர் ஐப்பசி மாதத்தில் அவதரித்தவர்கள். அவர்கள் மூவரும் முறையே திருவோணம், அவிட்டம், சதயம் ஆகிய நக்ஷத்திரத்தன்று அவதரித்தனர்.

இதே மாதம் மூல நக்ஷத்திரத்தன்று அவதரித்தவர் ஆசாரியர்களில் முடிவானவரான மணவாளமாமுனிகள்.

ஆக ஐப்பசி மாதமானது வைணவ சமயக் குரவர்களில் முதலாமவரும் முடிவானவரும் அவதரித்த பெருமையை உடையது. எனவே இக்கட்டுரைக்கு முதலும் முடிவும என்று பெயரிடலாயிற்று. இனி அவர்களுடைய வைபவத்தை (வாழ்க்கை வரலாற்றை) சுருக்கமாக காண்போம்.

முதலாழ்வார்கள் வைபவம்

ஆழ்வார்களுள் முதல்முன்னம் அவதரித்த ஆழ்வார்கள் மூவரும் முதலாழ்வார்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களைப் பற்றிப் பாசுரமருளிய மணவாள மாமுனிகள்

மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்துதித்து
நற்றமிழால் நூல்செய்து நாட்டை யுய்த்த-பெற்றிமையோ
ரென்று முதலாழ்வார்களென்னும் பெயரிவர்க்கு
நின்றதுலகத்தே நிகழ்ந்து

என்கிறார். இவர்கள் மூவரும் சமகாலத்தவர்கள்.

பொய்கை ஆழ்வார் : சான்றோருடைத்தான தொண்டை நாட்டில் முக்யமான நகரம் கச்சி எனப்படும் காஞ்சீபுரம். அங்கு வேகவதியாற்றங்கரையிலுள்ள திருவெஃகா என்கிற திருத்தலத்தில் ஒரு பொற்றாமரைப் பொய்கையில் பூத்ததொரு நற்றாமரை மலரிலே ஐப்பசிமாதம் திருவோண நக்ஷத்திரத்தன்று அவதரித்தவர் பொய்கையார். பொய்கையில் (குளத்தில்) அவதரித்ததனால் பொய்கையாழ்வார் எனும் பெயர் பெற்றார் இவர்.

பூதத்தாழ்வார் : தொண்டை நாட்டின் மற்றொரு சிறந்த நகரமான மஹாபலிபுரத்தில் ஒரு (குருக்கத்திப் பந்தரில்) குருக்கத்தி மலரிலே ஐப்பசி மாதம் அவிட்ட நக்ஷத்திரத்தன்று அவதரித்தவர் இவர். வடமொழியில் பூ என்ற வினையடிக்கு (தாதுக்கு) இருத்தல் (ஸத்தை பெறுதல்) என்ற பொருளுண்டு. இவர் எம்பெருமானைப் பாடியே உயிர் வாழ்ந்திருந்தபடியால் பூதத்தாழ்வார் எனப்படுகிறார்.

பேயாழ்வார் : தொண்டை நாட்டிலேயே மயிலைத் திருவல்லிக்கேணியில் ஒரு கிணற்றிலே உண்டான அல்லிப் பூவிலே பிறந்தவர். இவர் ஐப்பசி மாதம் சதய நக்ஷத்திரத்தன்று பிறந்தார். இவர் எம்பெருமான்மீது அளவற்ற பக்தியை உடையவர். எனவே எப்போதும் தொழுதும், அழுதும், சிரித்தும், ஆடியும், பாடியும் அலறியுமே போதுபோக்கிக் கொண்டு இருந்தார். இவ்வாறு இவர் பேய்போலத் திரிந்ததனால் பேயாழ்வார் எனப்பட்டார்.

இவ்வாறு அடுத்தடுத்த நாட்களில் பிறந்தவர்களாய், பகவானிடம் அளவிறந்த பக்தியுடன் அவனைக்காண வேண்டி, ஊர் ஊராகத் திரிந்து கொண்டு இருந்தனர். ஆயினும் இவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படவில்லை. எம்பெருமானும் இவர்கள் மூவரையும் ஓரிடத்திலே சேர்த்து ஆட்கொள்ள வேணுமென்று கருதினான்; அதற்கு ஒரு வாய்ப்பையும் உண்டாக்கினான்

இம்மூவரும் ஒருவரையொருவர் அறியாமல் திருக்கோவலூர் எனும் ஊரில் திரிந்து கொண்டிருந்தனர் ஒருநாள். அன்று சூரியன் அஸ்தமித்த பிறகு பெரும் மழையும் பெரும் காற்றும் உண்டாகியது. எனவே பொய்கையாழ்வார் என்பவர், ம்ருகண்டு எனும் முனிவரின் குடிலையடைந்து இடைகழியில் பள்ளி கொண்டிருந்தார். பிறகு பூதத்தாழ்வாரும் மழைக்கு ஒதுங்க அதே குடிலையடைந்து கதவைத் தட்டினர். பொய்கையாரும் கதவைத் திறந்து "இவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம்" என்று கூறினர். அவ்வாறே அவ்விருவரும் அவ்விடத்தில் வீற்றிருக்கையில் பேயாழ்வாரும் அவ்விடத்துக்கே வந்து கதவைத் தட்டினர். உடனே பூதத்தாரும் கதவைத் திறந்து "இவ்விடம் ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்" என்று கூற அவ்வாறே அம்மூவரும் அவ்விடைகழியில் நின்று கொண்டே எம்பெருமானுடைய பெருமையைப் பேசியும் கேட்டும் களித்திருந்தனர்.

அப்போது திருமால் தன்னுடைய திருவருளை அவர்கள் மீது பொழியும் பொருட்டு அங்கு நுழைந்தான். எம்பெருமானுடைய சக்தியாலும், மழையின் கனத்தாலும், இருட்டின் மிகுதியாலும் அவன் அங்கு உள்ளது முதலாழ்வார்களின் கண்களுக்குப் புலப்படவில்லை. மூவரே நிற்கக்கூடிய இடத்தில் எம்பெருமானும் வந்து நெருக்க, அவர்கள் "இதுவரையில் இல்லாத நெருக்கம் இப்போது உண்டானதற்குக் காரணம் தெரியவில்லையே! புதிதாக யாரேனும் இங்குப் புகுந்தவருண்டோ" என்று பார்த்தனர். உடனே பொய்கையாழ்வார் இருளை நீக்குவதற்காக இந்த உலகத்தையே அகலாக வைத்து கடலையே அதிலிடும் நெய்யாக வைத்து சூரியனையே விளக்கின் சுடராக வைத்து எம்பெருமானைத் துதித்தார்.

பூதத்தாழ்வாரும் தனக்கு எம்பெருமான் திறத்தில் இருந்த அன்பையே அகலாகவும் ஆர்வத்தை நெய்யாகவும் தன்னுடைய சிந்தையைத் திரியாகவும் வைத்து (ஞான விளக்கேற்றி) எம்பெருமானைத் துதித்தார்.

பேயாழ்வார், இவ்விருவர் ஏற்றிய விளக்கிளுெளியில் எம்பெருமானைக்கண்டு வணங்க, மூவரும் தங்களுக்கு ஏற்பட்ட பக்தியின் போக்குவீடாக பாக்களை அருளிச் செய்தனர். பொய்கையார் "வையம் தகளியா" என்று தொடங்கும் முதல் திருவந்தாதி 100 பாசுரங்களையும், பூதத்தார் "அன்பேதகளியா" என்று தொடங்கும் இரண்டாம் திருவந்தாதி 100 பாசுரங்களையும் பேயார் "திருக்கண்டேன்" என்று தொடங்கும் மூன்றும் திருவந்தாதி 100 பாசுரங்களையும் அருளிச் செய்துள்ளனர்.

பிறகு திருக்கோவலூரில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானை மங்களாசாஸனம் செய்து (வாழ்த்தி) பற்பல திருக்கோயில்களுக்கும் சென்று தொழுது முடிவில் திருவல்லிக் கேணியிலேயே நெடுங்காலம் எழுந்தருளியிருந்து வையகத்தை வாழ்வித்தனர்.

சரித்திர ஆசிரியர்கள் இவர்களது காலம் கி. பி. 7ம் நூற்றுண்டு என்று கூறிலுைம், இதில் பற்பல கருத்து வேற்றுமைகள் நிலவுகின்றன.

மணவாள மாமுனிகள் வைபவம்

திருநெல்வேலியில் ஆழ்வார் திருநகரி என்பது ஒரு திவ்ய தேசம். நம்மாழ்வார் அவதரித்த ஊர் இதுவே. இவ்வூரில் வாழ்ந்திருந்த திருநாவீறுடைய பிரான் தாஸரண்ணர் என்பவருக்கும் ஸ்ரீரங்க நாச்சியாருக்கும் கலியுகம் 4479 ம் வருஷம் (கி. பி. 1370) ஐப்பசி மாதம் மூல நக்ஷத்திரத்தன்று ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு ஸ்ரீ ரங்கநாதனுடைய பெயரான அழகிய மணவாளன் எனும் பெயரைச் சூட்டினர்.

ஸ்ரீமந் நாராயணனது படுக்கையான ஆதிஶேஷன் ராமாவதாரத்தில் லக்ஷ்மணனுக அவதரித்தான். க்ருஷ்ணுவதாரத்தில் பலராமனுக அவதரித்தான். பிறகு அவனே ஸ்ரீ ராமானுஜராக அவதரித்தான். அந்த ராமானுஜரின் மறுபிறப்பே இந்த அழகிய மணவாளன்.

அழகிய மணவாளனும் இளமையிலேயே தம் தந்தையிடமும், சிக்கல் கடாரத்தில் வாழ்ந்து கொண்டிருந்த தம் தாய் மாமனிடமும் கல்விகளைக் கற்ருர். தகுந்த காலத்தில் திருமணமும் புரிந்து கொண்டார்.

பின்னர் பிள்ளைலோகாசாரியர் எனுமாசாரியரின் சீடரான திருவாய்மொழிப்பிள்ளை என்பவரை அடிபணிந்து திருவாய்மொழி முதலிய ஸம்ப்ரதாயக்ரந்தங்களைக் (நூல்களை) கற்றுத் தேர்ந்தார். அக்காலத்தில் திருவாய்மொழிப்பிள்ளை, ஆழ்வார் திருநகரியில் ஸ்ரீராமாநுஜ சதுர்வேதி மங்கலம் என்கிற அக்ரஹாரத்தை ஏற்படுத்தி அதன் நடுவில் ஸ்ரீராமாநுஜருக்கு ஒரு ஸந்நிதியையும் கட்டி, அதன் நிர்வாகத்தை அழகிய மணவாளரிடம் ஒப்படைத்தார். மேலும், ஆசாரியர் கட்டளையை மேற்கொண்டு அழகிய மணவாளர், ஸ்ரீராமாநுஜர் திறத்தில் 'யதிராஜ விம்சதி' என்ற— இருபது சுலோகங்கள் கொண்ட —வடமொழி ஸ்தோத்திரத்தை இயற்றினுர். அப்போதே அழகிய மணவாளருக்கு யதீந்த்ர ப்ரவணர் (ஸ்ரீராமாநுஜ பக்தர்) என்ற பெயரைச் சூட்டினுர் திருவாய் மொழிப் பிள்ளை. இவ்வாறு ஸ்ரீராமாநுஜருக்கும் தம்முடைய ஆசாரியரான திருவாய் மொழிப்பிள்ளைக்கும் பலகாலம் அடிமை செய்து வாழ்ந்து வந்தார் அழகிய மணவாளன்.

திருவாய்மொழிப் பிள்ளை திருநாடலங்கரித்த (வைகுந்தம் அடைந்த) பிறகும் பலநாட்கள் ஆழ்வார் திருநகரியிலேயே எழுந்தருளியிருந்த அழகிய மணவாளர், ஸ்ரீரங்கத்து எம்பெருமானை மங்களாசாஸனம் செய்ய (சேவிக்க) எண்ணி ஸ்ரீரங்கத்தை அடைந்தார். அங்கிருந்து புறப்பட்டுப் பல திவ்ய தேசங்களையும் முறையே சேவித்து வருகையில்பெருமாள் கோயில் என்று கூறப்படும் காஞ்சியை அடைந்து "தேவராஜ மங்களம்" என்ற ஸ்தோத்திரத்தால் தேவப் பெருமாளை மங்களாசாஸனம் செய்தருளினுர்: அங்கேயெழுந்தருளியிருந்த கிடாம்பி நாயனுர் என்பவரிடம் இராமாநுசருடைய ஸ்ரீபாஷ்யத்தைக் கற்றுத்தேர்ந்து அதை (இராமாநுஜர் பிறந்த

ஊராகிய) ஸ்ரீபெரும்பூதூரில் ஒரு வருஷ காலம் உபந்யஸித்தருளினர். பிறகு ஸ்ரீரங்கத்திற்குத் திரும்பி, துறவறம்பூண்டு **மணவாள மாமுனி** ஆயினர்

முன்பே இவரை அடைந்திருந்த வானமாமலை ஜீயரைத் தவிர, பட்டர்பிரான் ஜீயர், கோயில் கந்தாடையண்ணன், ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன், எறும்பியப்பா முதலானோரும் மாமுனிகளுக்குச் சீடராயினர்.

இத்தகைய சீடர் குழாத்துடன் மணவாள மாமுனிகள் ஸ்ரீரங்கம் பெரிய திருமண்டபத்தில் நம்மாழ்வாருடைய திருவாய்மொழியை ஈடுமுப்பத்தாறாயிரம் முதலிய உரைகளுடன் ஒருவருடகாலம் உபந்யஸித்தருளினர். சாற்றுமுறை (முடிவு) நாளன்று ஸ்ரீரங்கநாதனே நாலைந்து வயதுள்ள அர்ச்சக குமாரனைக வந்து கைகூப்பி நின்று மணவாளமாமுனிகளைத் துதித்து

"ஸ்ரீசைலேச தயா பாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம் முநிம்"

என்ற தனியனை விண்ணப்பம் செய்து மறைந்தான். அன்று முதல் இத்தனியனே தமிழ் வேதமான திவ்யப்ரபந்தத்திற்கு **முதலும் முடிவுமாகக்** கடவதென்று பெருமாளுடைய கட்டளையாக ஏற்பட்டது. இவ்வாறு மணவாளமாமுனிகள் எம்பெருமானுக்கும் ஆசார்யராக ஆனர்.

அவர் எழுதிய நூல்கள் : உபதேச ரத்தினமாலை. திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்தி ப்ரபந்தம் என்ற தமிழ் ப்ரபந்தங்கள், ஸ்ரீவசநபூஷணம், தத்வத்ரயம், முமுக்ஷுப்படி இவைகளுக்கும், அழகிய மணவாளப்பெருமாள் நாயனர் அருளிச்செய்த ஆசார்யஹ்ருதயம் எனும் நூலுக்கும், பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி (400) பாசுரங்களுக்கும், திருவரங்கத்த முதனர் அருளிச்செய்த இராமாநுச நூற்றந்தாதி — இவைகளுக்கும் உரைகள். இவை **தவிர**

ஸ்ரீவைஷ்ணவ திருவாராதனக்ரமம் (நித்யம்) ஒன்றும் அருளிச் செய்துள்ளார்.

அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த மணவாளமாமுனிகள் தமது 73ம் வயதில் மாசிமாதம் கிருஷ்ணபக்ஷத்வாதசியன்று திருநாடலங்கரித்தார். தன் ஆசாரியனின் தீர்த்த தினத்தை இன்றைக்கும் அழகிய மணவாளனான ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீரங்கத்தில் குறையற நடத்திவைக்கிறான்.

வைணவ குருபரம்பரையில் முதலாகக் கருதப்படும் ஸ்ரீரங்கநாதன் ஆசாரியர்களுள் கடைசி ஆசாரியரான மணவாளமாமுனிகளுக்குச் சீடனாகி அந்தத்தொடரின் முடிவும் தானே என்று நிரூபித்தான். எனவே ஸ்ரீரங்கநாதனே முதலும் முடிவும்.

—o—

தமிழும் வைணவமும்

சாண்டில்யன்

வைணவத்தால் தமிழ் உயர்ந்ததா அல்லது தமிழால் வைணவம் உயர்ந்ததா என்று கேள்வி எழுமானால் பதில் சொல்ல முடியாத அளவுக்கு இரண்டும் இரண்டறக் கலந்திருக்கின்றன. நாலாயிர திவ்யப்ரபந்தத்தின் சம்பந்தமில்லாமல் எந்த வைணவக் கோயிலும் இயங்க முடியாத நிலையை எம்பெருமானார் முதலான மகாசாரியர்கள் ஏற்படுத்தி விட்டார்கள். வடமொழி வேதத்தைக் கரைகண்ட ஸ்வாமீ தேசிகன் அந்த வேதத்தில் தெளிவுபெறாத பலவிஷயங்களைத் தமிழ்மறையைப் பயின்றே புரிந்து கொண்டதாகக் கூறியிருக்கிறார். "செய்ய தமிழ் மாலைகளினால், தெளியாத மறை நிலங்கள் தெளியப்பெற்றோம்" என அவர் ஒருவழியாக வடமொழியைத் தீர்த்துக் கட்டியிருப்பதிலிருந்தே அப்பெரியாரின் தமிழ்ப் பற்றையும் வைணவ சமயத்தில் தமிழ் மொழி பெற்றுள்ள உயர்வையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

இது தவிர வைணவர்கள் வீட்டு சுபாசுபங்கள் சம்பந்தமான காரியங்கள் எதுவும் தமிழ் மறையின் தொடர்பின்றி முடிவதில்லை. 'வாரணமாயிரம்' பாடி, தேங்காய் உருட்டாமல் திருமணமில்லை. பிரபந்த சேவை சாற்றுமறையற்ற ஷஷ்டியப்தபூர்த்தி முகூர்த்தமில்லை. திருமணத்திலிருந்து 60வது மணம் பூர்த்திவரை வைணவன் வாழ்வில் தமிழ் மறை மணக்கிறது.

அவன் வாழ்வுக்குப் பின் பெருவாழ்வுக்குச் சென்ற பின்பும் காரியங்களை முடிப்பதில் தமிழ்மறை முதல் ஸ்தானம் வகிக்கிறது. ஒரு மனிதன் ஜீவதசைக்குப் பிறகு அவன் மனைவி மக்கள் ஓதும் தமிழ்மறை, வைகுண்டத்தில் நித்யசூரியாகிவிட்ட அவன் காதிலும் அவன் முன்னோர்கள் காதிலும் கூட விழுவதாக வைணவன் நினைக்கிறான்.

தெய்வத்துக்கு இத்தனை ப்ரீதி தமிழ்மறையில் இருக்கிறதா என்ற வினவுக்கு விடை ஸ்ரீராமானுஜருடைய வாழ்க்கைச் சரித்திரத்திலேயே இருக்கிறது. காஞ்சி தேவப் பெருமாளிடமிருந்து விடைபெற்று உடையவரை ஸ்ரீரங்கத்துக்குக் கொண்டு வர ஸ்ரீரங்கநாதனே வரதராஜன்முன்பு தமிழ்மறை இன்னிசை பாட அரையரை அனுப்புகிறான். அந்த அரையர் இன்னிசைக்கும், ப்ரபந்தத்தின் இனிமைக்கும் கட்டுப்பட்ட வரதன் ஸ்ரீரங்கத்துக்கு உடையவரை அனுப்பிவைக்கிறான். இந்த ஒரு நிகழ்ச்சி எம்பெருமானார் வாழ்க்கைச் சரித்திரத்திலேயே காணப்படுகிறது.

ஆக, தமிழுக்கு மணம் சூட்டி தெய்வீகத்தன்மை அளித்து, அதையே தழுவி வாழ்பவன் வைணவன். அப்படி இருக்க தமிழ் வேறு வைணவம் வேறு என்று எப்படிச் சொல்ல முடியும். இரண்டும் ஒன்றாக, இரண்டும் சேர்ந்து, இறைவன் கருவியாக உலகம் உய்யும் பாதையை வைணவம் அன்றும் நடத்தியது; இன்றும் நடத்துகிறது.

—o—

பகவத் கீதாஸாரம்

ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் பெருமாள்கோயில்
ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

ஸர்வேச்வரன் உபயவிபூதிநாதனென்று கொண்டாடப் படுகிறான். லீலாவிபூதியும் நித்யவிபூதியுமாகிய மண்ணுலகும் விண்ணுலகும் உபய விபூதிகளெனப்படும். *அருளார் திருச்சக்கரத்தால் அகல் விசும்பும் நிலனும் இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்* என்று (திருவிருத்தத்தில்) நம்மாழ்வாரும், *பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே யாள்கின்றவெம் பெருமான்* என்று (நாச்சியார் திருமொழியில்) ஆண்டாளும் எம்பெருமானுடைய உபய விபூதி நிர்வாஹகத்வத்தைப் பற்றிப் பேசின பாசுரங்கள் அறியத் தக்கன. நித்யவிபூதிக்கு எதிராயிருக்கின்ற இந்த லீலா விபூதியை மாஞானிகள் 'இருள் தருமாஞாலம்' என்று வழங்குகிறார்கள். இம் மண்ணுலகம் இருளே மலிந்ததென்று சொல்லப்படுகிறது. ஸூர்யன் சந்திரன் அக்னி முதலிய சுடர்ப்பொருள்களால் போக்கமுடியாத அகவிருள் [அஜ்ஞாநாந்தகாரம்] இங்கு இருளெனப்படுகிறது. "அந்தம் தம இவாஜ்ஞாநம்" என்று ஸ்ரீபராசரமஹர்ஷியும் சொல்லிவைத்தார்.



இப்படிப்பட்ட அகவிருளை அகற்றுவதற்காகப் பேரருளாளனை எம்பெருமான் *கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள்தானும் மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினலருள் செய்து* என்று திருமங்கையாழ்வாரருளிச் செய்தபடியே ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராணதிகளான நாநாசாஸ்த்ரங்களை யுபகரித்தருளினன். அப்படி உபகரித்தவிடத்தில் ஸத்வாரமாகப் பல நூல்களையும் அத்வாரகமாகச் சில நூல்களையும் இவ்வுலகில் அவதரிப்பித்தருளினன். வ்யாஸபராசர வால்மீகி ப்ரப்ருதிகளான மஹர்ஷிகளை த்வாரமாகக் கொண்டு அவர்கள் வாயிலாக வெளியிட்டவை ஸத்வாரக மெனப்படும். அப்படி யன்றிக்கே தானே ஸாக்ஷாத்தாக வெளியிட்டவை அத்வாரக மெனப்படும். இப்படிப்பட்ட அத்வாரக சாஸ்த்ரங்களுள் பகவத் கீதாசாஸ்த்ரம் தலைசிறந்து விளங்குகிறது,

வேதேஷு பௌருஷம் ஸூக்தம் தர்மசாஸ்த்ரேஷு மாநவம், பாரதே பகவத்கீதா புராணேஷு ச வைஷ்ணவம் = வேதங்களுக்குள்ளே புருஷஸூக்தமும் தர்மசாஸ்த்ரங்களுக்குள்ளே மநுஸ்ம்ருதியும், மஹாபாரதத்திற்குள்ளே ஸ்ரீகீதையும், புராணங்களுக்குள்ளே ஸ்ரீவிஷ்ணுபுராணமும் சிறந்தவையென்று சொல்லிற்று. பஞ்சம வேதமாகப் புகழப் படுகின்ற மஹாபாரதத்தினுள்ளே கீதோபநிஷத்தென்று குலாவப் படுகின்ற பகவத்கீதையானது பெரும்பாலும் ஸகலமதஸ்தர்களாலும் உச்சிமேல் வைத்து மெச்சப்படுகின்றதென்பது உலகமறிந்தது. உபநிஷத்துக்களின் அரியபெரிய பொருள்களெல்லாம் இது தன்னில் அடங்கிக் கிடக்கின்றமையால் எப்படிப்பட்ட பண்டிதர்களுக்கும் வியாக்கியானங்களின் உதவியின்றி இதன்பொருள் அறிய முடியாததாயிருக்கும்; ஆனது பற்றியே பலபல மஹான்களும் மஹாசார்யர்களும் மேதாவிகளும் இதற்கு அனேக வியாக்கியானங்கள் இயற்றியுள்ளார்கள். மூலத்தின்மேல் ப்ரதிபத வியாக்கியானமாகவும் பொழிப்புரையாகவும், கருத்துரையாகவும், உபந்யாஸ ரூபமாகவும், ஆராய்ச்சி யுருவமாகவும் மற்றும் பலவிதமாகவும் கீதைக்கு

அமைந்திருக்கின்ற விவரணங்கள் எண்ணுதற்கரியன. இவை இரண்டொரு பாஷைகளிலல்ல; ஐந்தாறு பாஷைகளிலுமல்ல; உலகில் எத்தனை பாஷைகள் நடையாடுகின்றனவோ, அத்தனை பாஷைகளிலும் தோன்றியுள்ளன. இது கொண்டே இதன் ஒப்புயர்வற்ற மஹிமை அறியற் பாலது.

எத்தனை வியாக்கியானங்கள் அவதரித்திருந்தாலும் 'மதத்ரய பாஷ்யம்' என்று ப்ரஸித்தமாக வழங்கப்பட்டு வருகின்ற மூன்று பாஷ்யங்களே வைதிகவுலகில் அதிகமான ப்ரஸித்தியையடைந்திருக்கின்றன. வட இந்தியாவில் வல்லபமதத்திற்கு அதிகப்ரசாரம் காண்பதனல் ஆங்கே வல்லபாசார்ய வியாக்கியானமும் சிறந்ததாகக் குலாவப்படும். நமது நாட்டில் சங்கராசார்யரியற்றிய அத்வைதபரமான பாஷ்யமும், ஸ்வாமி யெம்பெருமானரியற்றியருளின விசிஷ்டாத்வைத பரமான பாஷ்யமும் இவற்றுக்கு அவரவர் சிஷ்யகோடிகள் இயற்றிய டீகைகளும் ப்ரஸித்திபெற்று விளங்குகின்றன. பகவத்ராமாநுஜர் அருளிச் செய்த பாஷ்யமும் அதற்கு வேதாந்த தேசிகன் அருளிய தாத்பர்யசந்த்ரிகை யென்னும் டீகையும் ஸ்ரீவைஷ்ணவஸம்பிரதாயத்தில் மிகவுயர்ந்த ஸ்தானத்தை யலங்கரித்து வருகின்றன.

மதத்ரய பாஷ்யங்களென்று ப்ரஸித்தமான மேலே குறித்த மூன்றுபாஷ்யங்களும் ஸம்க்ஷேபமான முறையில் அவதரித்தவை யெனினும், மத்வாசார்ய பாஷ்யமானது மிகவும் ஸம்க்ஷிப்தமாகத் தோன்றியது. சங்கராசார்ய பாஷ்யமானது அதைவிடச் சிறிது விரிவாகத் தோன்றியது. பகவத்ராமாநுஜ பாஷ்யமானது ஆவச்யக விஷயங்களைச் சிறிதும் விடாமலும் அநாவச்யக விஷயங்களை அடியோடு ஏற்றுக்கொள்ளாமலும் பரம போக்யமான பத்ததியில் அவதரித்துள்ளது. உலகில் அவரவர்கள் தம்தம் ஸம்பிரதாய நூல்களைப் புகழப் பிறந்தவர்களாதலால் அதற்குச்சேர நாம் பகவத் ராமாநுஜ பாஷ்யத்தை ப்ரசம்ஸிப்பதாகச் சிலர் நினைக்கவுங்கூடும். வஸ்துஸ்திதியில், எந்த மதத்தைச் சேர்ந்தவரும் பகவத்ராமாநுஜ பாஷ்யத்தைக்கண்டு ஈடுபடுவதை நாம் காண்கிறோம் : மூலத்தி

லுள்ள ஒரு பதத்திற்கும் அர்த்தம் செய்வதை விடாமலும் பொருத்தமான அந்வயக்ரமங்களையும் அர்த்தங்களையும் காட்டியும் அருளிச் செய்யப்பட்டபாஷ்யம் இஃதொன்றே யென்று நாம் கூசாமல் கூறலாம். அது அபிமானத்தினுல் சொல்லப்படுகிற வார்த்தை யென்று பிறர் நினைத்தாலும் நினைத்திடுக. விவேகிகளான யாவருடைய மனமும் ஒருங்கே இசையக்கூடிய வார்த்தையே இது என்பது வஸ்துஸ்திதி.

ஒவ்வொரு க்ரந்தத்திற்கும் அவதாரிகையுண்டு. ஆனுல் அந்த அவதாரிகையானது பெரும்பாலும் வியாக்கியானகாரர்களால் விவரிக்கப்படும். அது மூலக்ரந்தத்தில் இல்லாமலிருக்கும். திருவாய்மொழிக்கு முதல் ச்ரிய:பதியென்றும் இரண்டாம் ச்ரிய:பதியென்றும் அவதரித்துள்ள அவதாரிகைகள் வியாக்யானகாரர்களினுல் அமைக்கப்பட்டவையே யன்றி மூலமான திருவாய்மொழியில் அவதாரிகையாக ஓ ரக்ஷரமும் கிடையாது. கீதையில் அப்படியன்றிக்கே முதலத்யாயம் முழுதும் அவதாரிகையாகவே தோன்றியுள்ளது. 'இந்த நூல் எதற்காக அவதரிக்கின்றது' என்பதை விசதமாக நிரூபிப்பது தானே அவதாரிகை. அதனை நாம் பிறர் வாயினுல் தெரிந்து கொள்ள வேண்டாமல் கீதையைக் கொண்டே நன்கு தெரிந்து கொள்ளுகிறேமாதலால் இதற்கு அவதாரிகையும் இதிலேயே பொருந்தியிருக்கிறதென்றுணர்க.


கண்ணபிரான் பாண்டவர்கட்காகத் துரியோதநனிடம் தூதுசென்று ஸமாதான வழிகள் பல பேசியும் "வீரபோக்யா வஸுந்தரா" ஆகையாலே போர்க்களத்தில் வீரத்தனத்தைக் காட்டி வெற்றிபெறுமவர்களே ராஜ்யமாளக் கடவர்கள் என்று த்ருதராஷ்ட்ர வகுப்பினர் கூற, பிறகு யுத்தமே நடத்தக்கடவதாக முடிவு பெற்றது இருவகுப்பினரும் படைத்துணை வேண்டிக் கண்ணபிரான் பக்கலிலே வந்தார்கள். துரியோதனன் கண்ணபிரானைத் துணையாக விரும்பவில்லை. க்ருஷ்ணு ச்ரயா; க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாச்ச பாண்டவா: என்னும் புகழ்பெற்ற பாண்டவர்களுக்கே கண்ணபிரான் துணைவனுக நின்றுன். உலகின் பாக்கியத்தினுல் பகவத்கீதா சாஸ்திரம் அவதரிக்கின்றது.

(தொடரும்)

திருவாய்மொழியும் த்வயமும்

ந்யாய வேதாந்த வித்வான் ஸ்ரீ. உ. வே வேளுக்குடி
K. வரதாசாரியார் ஸ்வாமி

தத்வஜ்ஞாநாத் மோக்ஷம் என்கிற இது ஸகலஸித்தாந்த ஸாரம். ஸம்ஸாரிகளுக்கு மோக்ஷ ப்ரயோஜக தத்வஜ்ஞாநம் விளையவும் அவர்கள் ஆத்மாந்த தாஸ்யரஸம் பெறவும் க்ருஷி செய்தவன் ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன். ஸம்ஸாரிகளான ஜீவாத்மாக்கள் உஜ்ஜீவிப்பதற்காக அவன் சாஸ்த்ர ப்ரதாநம் பண்ணின மஹோபகாரகன். அவன் பதரிகாச்ரமத்தில் திரு மந்திரமான மஹாமந்திரத்தை உபதேசம் பண்ணியருளினான். அந்த எம்பெருமான்தானே ஸ்ரீ விஷ்ணுலோகத்தில் த்வயம் எனும் மந்திரத்தை ப்ரகாசப்படுத்தினான். அவனே குரு க்ஷேத்ரத்திரமான திவ்ய தேசத்தில் சரமச்லோகமான ரஹஸ்யத்தை உபதேசம் பண்ணியருளினான். இந்த ரஹஸ்யங்கள் மூன்றையும் நம்முன்னோர் ரஹஸ்யத்ரயம் என்பர்.



ரஹஸ்யத்ரயத்தில் முதல் ரஹஸ்யம் (ஓம் நமோ நாராயணாய எனும்) மூலமந்திரமான திருமந்திரம். அதன் விவரணமாக அமைந்தது இரண்டாவது மந்த்ரமான த்வயம் என்பது. அதாவது "ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே, ஸ்ரீமதே நாராயணாய நம:" எனும் மந்த்ரமே அது. மூன்றாவது ரஹஸ்யம் சரமச்லோகமாகும்.

இந்த ரஹஸ்யத்ரயத்திற்கு நம்பூர்வாசாரியர்கள் பலர் வ்யாக்யானம் அருளிச் செய்திருந்தாலும் நமக்கு இப்போது முதலில் கிடைப்பது பட்டர் அருளிச் செய்துள்ள அஷ்டச்லோகியே.

எட்டுச்லோகங்கள் கொண்ட அஷ்டச்லோகியில் முதல் 4ச்லோகங்களால் திருமந்த்ர வ்யாக்யானம் செய்கிறார். பிறகு 5-6 சுலோகங்களில் த்வயார்த்த விவரணம் பண்ணுகிறார். 5வது ச்லோகத்தில் பதார்த்தமும் 6வது ச்லோகத்தில் வாக்யார்த்தமும் அருளிச் செய்கிறார் ஸ்ரீபராசரபட்டர்.

இரண்டு வாக்யங்களோடு கூடியது ஆறுபதங்களோடு கூடியது, பத்து அர்த்தங்களோடு கூடியது த்வயம் என்பது. அப்பத்து அர்த்தங்களாவன 1. ஸ்ரீசப்தார்த்தம் 2. மதுப் ப்ரத்யயார்த்தம் 3. நாராயண சப்தார்த்தம் 4. சரணசப்தார்த்தம் 5. ஶரணசப்தார்த்தம் 6. ப்ரபத்யே சப்தார்த்தம். ஆக இவை ஆறும் பூர்வவாக்யத்தில் தெரிவிக்கப்பட்டன. இனி உத்தரவாக்யத்தில் 1 ஸ்ரீமச்சப்தார்த்தம் 2. நாராயணசப் தார்த்தம் 3. ஆய எனும் நான்காம் வேற்றுமைக்கு அர்த்தம் 4. நம: சப்தார்த்தம் ஆக நாலு அர்த்தங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இது பராசரபட்டர் நிர்வாஹம்.

பிள்ளை யுலகாசிரியர் அருளிச் செய்துள்ள 18 ரஹஸ்ய க்ரந்தங்களுள் ஸாரஸங்க்ரஹம் என்பது ஒன்று, அதில் த்வயத்திற்கு த்வயம் என்ற பெயர் வரக்காரணம் இன்னது என்பதை விவரித்தருள்கிறார். த்வயத்தின் பூர்வ வாக்யத்தில் உபாயம் (அடையும் வழி) உத்தரவாக்யத்தில் அடையும் பலம் இரண்டும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே) — பகவானை அடைவதற்கு அவனுடைய திருவடிகளை சரணமாகப் பற்றுவதே உபாயம். அப்படிப்பற்றுவதால் பெறும் பலன் (ஸ்ரீமதே நாராயணாய நம:) அவனுக்கு நாம் செய்யும் கைங்கர்யமே. இவ்விரண்டு அர்த்தங்களை தெரிவிக்கிறபடியால் இது த்வயம்; பிராட்டி, பெருமாள் இரண்டு தத்வங்களைத் தெரிவிக்கிறபடியால் த்வயம்; **சரணௌ** என்று

திருவடிகளிரண்டைச் சொல்லுகிறபடியால் த்வயம்; என்று பல வித நிர்வாஹங்களை அருளிச் செய்கிறார்.

நம்மாழ்வார் அருளிச் செய்துள்ள திருவாய் மொழி த்வயார்த்த ப்ரதிபாதகம் என்பது நம் பூருவர்கள் கொள்கை. அதனை பிள்ளைலோகாசாரியர் வாதிகேஸரி அழகிய மணவாள ஜீயர், வேதாந்த தேசிகன் ஆகியோர் எவ்வாறு அருளிச் செய்கின்றனர் என்பதைப்பற்றி விரிவாகக் காண்போம்.

த்வயத்தின் பத்து அர்த்தங்களும் திருவாய் மொழியின் பத்து பத்துக்களால் விவரிக்கப்படுகின்றன என்றருளிச்செய்கிறார் பிள்ளை லோகாசாரியர் ஸாரஸங்க்ரஹத்தில்.

பராசரபட்டர் பூர்வ வாக்யத்தில் 6 அர்த்தங்களும் உத்தர வாக்யத்தில் 4 அர்த்தங்களும் விவரிக்கப்படுகின்றன என்றார். ஆனால் பிள்ளைலோகாசாரியர் பூர்வவாக்யத்தில் 5 அர்த்தங்களும் உத்தர வாக்யத்தில் 5 அர்த்தங்களும் விவரிக்கப்படுவதாக அருளிச் செய்கிறார். திருவாய் மொழியின் முதல் 5 பத்துக்கள் பூர்வவாக்ய விவரணம் என்றும் மேல் 5 பத்துக்கள் உத்தர வாக்ய விவரணம் என்றும் அவருடைய நிர்வாஹம்.

திருவாய்மொழிக்கு பன்னீராயிரப்படி உரை அருளிச்செய்துள்ள வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயர் தமது உரையின் ப்ரவேசத்தில் "ஸ்ரீ பதி: சேதநஸ்யாஸ்ய ஹேதுத்வேந ஸமாச்ரித: அநிஷ்ட ஹாநிம் இஷ்டஸ்ய ப்ராப்திம் ச குருதே ஸ்வயம்" என்றொரு ச்லோகத்தை அருளிச் செய்கிறார்.

"இந்த ஜீவாத்மா எம்பெருமானை உபாயமாகப் பற்றுவனேயானால் அவனுக்கு எம்பெருமான் தானே அநிஷ்டத்தைத் தொலைத்து இஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறான்" என்பது இந்த ச்லோகத்தின் பொருள். இதில் 5 அர்த்தங்கள் காட்டப்படுகின்றன அதாவது 1. எம்பெருமான் 2. சேதநன் 3. உபாயம் 4. அநிஷ்ட நிவ்ருத்தி 5. இஷ்டப்ராப்தி. இவ்வைந்து அர்த்தங்களையும் முறையே இரண்டிரண்டு பத்துக்களால் பத்துப்பத்துக்களால் — நம்மாழ்வார் தெரிவிக்கிறார் என்பது வாதிகேஸரிஜீயருடைய நிர்வாஹம்.

வாதிகேஸரி ஜீயர் மற்றுமொரு நிர்வாஹம் அருளிச் செய்கிருர். அதாவது முதல் நாலு பத்துக்கள் ஸித்தவஸ்துவான பரமாத்மாவையும் ஜீவாத்மாவையும் (முறையே இரண்டு இரண்டு பத்துக்களால்) தெரிவிக்கின்றன.

கடைசி நான்கு பத்துக்கள் ஸாத்ய வஸ்துவைத் தெரிவிக்கின்றன. அதாவது அநிஷ்ட நிவ்ருத்தி 7, 8 பத்துக்களிலும் இஷ்டப்ராப்தி 9, 10 பத்துக்களிலும் தெரிவிக்கப்படுகின்றன.

இடையில் 5, 6 இரண்டு பத்துக்கள் ஸித்த ஸாத்ய பரங்கள். எம்பெருமான் எப்போதும் உள்ளவன். ஆகையால் அவன் உபாயமாகிருன். அதைத் தெரிவிப்பது ஐந்தாம்பத்து. ஸித்தோபாய ப்ரதிபாதகம் ஐந்தாம்பத்து என்றபடி. அவன் எப்போதும் உபாயமாயிருந்தாலும் அவனை நாம் உபாயமாகத் தெரிந்து கொண்டு அவனைப் பற்றுதல் ஸாத்யம். இது ஆறும் பத்தில் தெரிவிக்கப்படுகிறது.

த்ரமிடோபநிஷத் ஸாரத்தில் வேதாந்த தேசிகன்-முதல் பத்தில் எம்பெருமான் உபாயம் என்றும் 2ம் பத்தில் எம்பெருமான் ப்ராப்யம் என்றும் 3ம் பத்தில், அப்படி ப்ராப்ய ப்ராபகனை எம்பெருமான் திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டன் என்றும் நம்மாழ்வார் அருளிச் செய்வதாக அருளிச்செய்கிருர். 4ம் பத்தில் அவனைத்தவிர வேறு பலம் கிடையாது என்று முதலித்த பிறகு மேல் ஆறுபத்துக்களால் அவனைத்தவிர வேறு உபாயம் கிடையாது என்கிருர் நம்மாழ்வார். அதாவது திவ்யமங்கள விக்ரஹவிசிஷ்டனை எம்பெருமான் ப்ராப்ய ப்ராபகபூதன் என்று தெரிவிப்பதே நம்மாழ்வாருடைய திருவாய்மொழி என்பது தேசிகனுடைய நிர்வாஹம்.

இவ்வாறு பூர்வாசாரியர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக திருவாய் மொழியையும் த்வயத்தையும் சேர்த்து அநுபவித்துள்ளனர். இவற்றை அநுபவிப்பதையே பரம போக்யமாகக் கொண்டிருந்த நம் ஆசார்யர்களின் அபிப்ராயங்களை நிர்வாஹங்களை உள்ளபடி அறிந்து அநுபவிப்பதே நமக்கு ஸ்வருபாநுருபமான காலக்ஷேபமாகும். (தொடரும்)

குருகூர்ச் சடகோபன்

பேராசிரியர் Dr. V. V. ராமாநுஜம்

முன்னுரை:

ருஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ணத்ருஷ்ணாதத்வமிவோதிதம்
ஸஹஸ்ரசாகாம் யோத்ராக்ஷீத் த்ராவிடீம் ப்ரஹ்மஸம்ஹிதாம் |

திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களை ஈந்த முதல் தாயான சடகோபனை க்ருஷ்ணத்ருஷ்ணாதத்வம் என்றும் ருஷி என்றும் கொண்டாடுகிறார் ஸ்ரீபராசரபட்டர் மேலே காட்டிய ச்லோகத்தில். தமது ஸ்தோத்ரரத்னத்தில் ஆளவந்தார் இவரை "ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்'' என்று பணிக்கிறார். சடகோபன் என்றும் பராங்குசன் என்றும் போற்றப் படுபவர் ஸத்ஸம்ப்ரதாயத்தில் நம்மாழ்வார் என்று போற்றப் படும் ப்ரபன்னஜன கூடஸ்தர் (ப்ரன்ன குலமுதல்வர்) ஆவார். நமது பொய்யிலாத மணவாள மாமுனிகளும், தமது உபதேசரத்தினமாலையில்,

உண்டோ வைகாசிவிசாகத்துக்கு ஒப்பொருநாள்?
உண்டோ சடகோபர்க்கு ஒப்புஒருவர்?—உண்டோ
திருவாய்மொழிக்கு ஒப்பு? தென் குருகைக்கு உண்டோ
ஒரு பார்தனில் ஒக்குமூர்?

என்று ஒப்பிலாத விஷயங்கள் நான்கை ஒரு கோர்வையாகக் கோத்து நமக்குத் தருகிறார். ஒத்தாரும் மிக்காரும் இல்லாத மாமாயன் எம்பெருமான். அதே ஒப்பற்ற பெருமை படைத்தவர் நம்மாழ்வாரான சடகோபர். அவர் பிறந்த திரு நாளான வைகாசி விசாகமும் ஒப்பற்றது. அவர் பிறந்த திவ்

வியதேசமான தென்குருகை (திருக்குருகூர்; ஆழ்வார் திருநகரி)யும் ஒப்பற்ற இடமாகும். இவைகளுக்குமேலே, செந்தமிழ் மறையாய் நமக்குப் பரம உபகாரமாய் ஆழ்வார் பாடித் தந்துள்ள திருவாய்மொழி ஒப்பற்ற ஒரு திவ்வியப்பிரபந்தம் ஆகும்.

நம்மாழ்வாரை, "ஆத்யஸ்யந: குலபதே: வகுளாபிராமம் ப்ரணமாமி மூர்த்நா" என்று ஆளவந்தார் குலபதியாகக் காட்டிக் கொடுக்கிறார். ஆழ்வார் பாடிய திருவாய்மொழி, "யானாய்த் தன்னைத் தான்பாடி" என்று ஆழ்வார் சொற்படியே எம்பெருமானே ஆழ்வார் வாக்கில் நின்று பாடிய ப்ரபந்தம் என்பர். பெருமான் முன்னுருச் சொல்ல ஆழ்வார் பின்னுருச் சொன்னார் என்பர் பெரியோர். திருவாய்மொழி என்ற பெயரே இது ஒப்பற்ற திவ்வியப்பிரபந்தம் என்றதனைக் காட்டும். நூறு பதிகங்கள் கொண்ட இந்த ப்ரபந்தத்தில் பதிகந்தோறும் திருநாமப்பாட்டு ஒன்று உண்டு. இதனில், பெரும்பாலும் "குருகூர்ச் சடகோபன் சொன்ன ஆயிரம்" என்ற சொற்றொடர்களைக் காணலாம். நம்பெரியோர்கள் திருவாய்மொழியை பெருமாள் திருவீதிப் புறப்பாடு கண்டருளும் போது ஸேவிப்பதில்லை. எம்பெருமான் திருவோலக்கமாக வீற்றிருந்து ஆஸ்தானத்தில் திருவாய்மொழியைக் கேட்டருள்வதே அநாதியான மரபு. தெய்வீகமான இப்பாசுரங்களை ஸேவிக்கும் போது "குருகூர்ச் சடகோபன்" என்று வரும் போது கைகூப்பி வணங்குவது பெரியோர் வழக்கம்.

திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி, ஈடுமுப்பத்தாறாயிரப்படி என்று நமது பூருவாசாரியர்களால் பல வியாக்யானங்கள் அருளிச் செய்யப்பட்டுள்ளன. மூலத்துடன் இவை எல்லாவற்றையும் சேர்த்து பகவத் விஷயம் என்று அடியார்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் பூசித்து நல்கியுரைப்பர்.

இத்தகைய ஒப்பில்லாத பெருமை வாய்ந்த ஆழ்வார் அவர் திருவவதாரம் பண்ணிய திருக்குருகூர், அவர் அருளிச்

செய்துள்ள திவ்யப்ரபந்தங்கள், அவற்றுள் ஆழ்வார் நமக்கு உபதேசிக்கும் சீரிய பொருள்கள் இவைகளைக் கட்டுரைத் தொடராக வரைந்து, கீதாசார்யன் என்ற நற்பெயரைத் தாங்கி வரும் இந்த ஏடுகளில் வாசகர்களான அடியார் குழாங்களுடன் அநுபவிக்கலாம் என்ற விருப்பத்துடன் ஆரம்பிக்கிறேன். இந்த விருப்பத்தை ஸபலமாக ஆக்கும்படி பார்த்தன் தன் தேர்முன் நின்ற கீதாசார்யனையும், குலபதியான நம்மாழ்வாரையும், அவரடி பணிந்துய்ந்தவரான எம்பெருமானாரையும் அடிபணிந்து வேண்டி நிற்கிறேன்.

ஆழ்வார் திவ்வியப் பிரபந்தங்கள் அருளிச் செய்தமை :— "உண்ணும் சோறு, பருகுநீர், தின்னும் வெற்றிலை" என்கிற படியே தாரக, போஷக, போக்யங்கள் எல்லாம் இவருக்குக் கண்ணனே (பகவதநுபவமே) ஆக இருந்தபடியால் அந்த அநுபவம் பல பாமாலைகளாக வெளிப்பட்டன. நாலுவேதங்களின் ஸாரமாக நாலு திவ்வியப்பிரபந்தங்கள், "தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன்" என்ற கணக்கில் செவிக்கினிய செஞ்சொல்லான தெய்வத்தமிழில் ஆழ்வார் அருளிச் செய்ததை மதுரகவிகள் பட்டோலை கொண்டார். இவற்றில் **திருவிருத்தம்** ருக்வேதத்தின் ஸாரம்; **திருவாசிரியம்** யஜுர்வேதத்தின் ஸாரம்: **பெரிய திருவந்தாதி** அதர்வண வேதத்தின் ஸாரம்; **திருவாய்மொழியாயிரமும்** பகவத்ஸ்வரூபமான ஸாமவேதத்தின் ஸாரமாகும்

திருவாசிரியத்தில் ஆழ்வார், திருமாலே முழுமுதற் கடவுள் என்று தமது ஸித்தாந்தத்தை அழகாக ஆணித்தரமாக வெளியிட்டருளுகிறார். இவர் உபதேசங்களால் உலகமடங்கத் திருந்தி எம்பெருமானடியார்களாகத் திகழ்வதைக்கண்டு விண்ணவர்களும் ச்வேதத்வீபவாஸிகளான பக்தர்களும் மங்களாசாஸனம் பண்ணவர, அவர்களை "பொலிக! பொலிக! பொலிக!" என்று வாழ்த்துகிறார். இந்த வைஷ்ணவதர்சனம் பின்னர் எம்பெருமானாரவதரித்து இன்னும் தழைத்தோங்கப் போவதைக் "கலியும் கெடும் கண்டு கொண்மின்!" என்று முன்னமேயே குறிப்பாக உணர்த்தியருளினார்.

திருவாய் மொழியின் பெருமை : ஆழ்வார் அருளிச்செய்த நான்கினுள் திருவாய்மொழியே மிகவுயர்ந்த பிரபந்தமாகும் திரு—வாய்மை—மொழி என்ற சொற்கள் கொண்ட சொற்றொடர் இது சிறந்த மாறுபாடில்லாத சொல்லான வேதமே இது. "ஸகல வித்யாதிக வேதம் போலே இது திவ்யப்ரபந்த ப்ரதானம்" ஆகும். எம்பெருமான் ஆழ்வாரை வியாஜமாகக் கொண்டு, தானே தன்னைப் பாடிக் கொண்டதால் இது திருவாய்மொழி யாயிற்று என்பர். இத்திருவாய்மொழி த்வயம் எனப்படும் மந்திர ரத்னத்தின் விவரணமாக அமைந்தது. திரமிடோபநிஷத் என்றும் தமிழாரணம் என்றும் கொண்டாடப் படும் இது. நாம் அவசியம் அறிந்துகொள்ள வேண்டிய ஐம் பொருள்களையும் தெளிவாகக் காட்டுவது இது என்பதை,

> **மிக்க இறைநிலையும், மெய்யாம் உயிர்நிலையும்,**
> **தக்க நெறியும், தடையாகித் தொக்கியலும்**
> **ஊழ்வினையும், வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்**
> **யாழினிசை வேதத்தியல்**

என்ற பாசுரத்தால் பராசரபட்டர் அருளிச் செய்துள்ளார். திருவரங்கனை நம்பெருமாள் புகழ்பாடுமவை இவையாயிரமும்; இப்பாமாலைகளைக் குருகூர்ச் சடகோபன் தாயாகப் பெற்றெடுத்தாராயினும், இவற்றை நன்முறையில் வாழ வைத்து உலகில் யாவரும் கற்றுப்பயனுறும்படிச் செய்த இதத்தாய் நம் பெரும்பூதூர் வள்ளலான இராமாநுசனே என்பதை

> **வான் திகழும்சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்**
> **ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும் ஈன்ற**
> **முதல்தாய் சடகோபன்; மொய்ம்பால் வளர்த்த**
> **இதத்தாய் இராமாநுசன்.**

என்று பொறித்து வைத்தார். நம்மாழ்வாரிடம் ஆராத காதல் கொண்டு விளங்கியதால் "மாறனடி பணிந்துய்ந்தவன்" என்றும், "சடகோபன் பொன்னடி" என்றும் நம்மிராமாநுசன் போற்றப்படுகிறார்.

ஆழ்வார் முதல்வர் : "மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து அடியையடைந்து உள்ளம் தேறி" என்று தாமே அருளிச் செய்கிறபடியே, ஸம்ஸாரிகளில் ஒருவராயினும் இவர் பிறப்பதற்கு முன்னமேயே எம்பெருமானால் மயர்வறமதிநலம் அருளப் பெற்றவராய், திருத்துழாய் முளைக்கும்போதே தனக்கேயுரித்தான மணத்துடன் திகழுமாப் போலே ஞானபக்தி வைராக்கியங்களுடன் திருவவதாரம் செய்தருளியமை கொண்டு இவரைக் குலபதி என்றும் தலைவர் என்றும் அழைப்பது சாலப் பொருந்தும். இவரை அவயவியாகவும் மற்றய ஆழ்வார்களை இவரது அவயவங்களாகவும் நமது பெரியோர் உருவகப்படுத்துவர். பூதத்தாழ்வார் இவருடைய சிரம் (தலை); பொய்கையாழ்வார் திருக்கண்கள்; பெரியாழ்வார் திருமுகமாவர்; திருமழிசையாழ்வார் கழுத்து; குலசேகரரும் பாண்பெருமாளும் திருக்கைகள்; தொண்டரடிப்பொடிகள் திருமார்பு; கலியன் கொப்பூழ்; மதுரகவியாழ்வார் இவருடைய திருவடிகள்; திருவடி நிலைகளோ நம்மிராமாநுசன்.

ஆழ்வாருடைய திருநாமங்கள் : எம்பெருமானைப் போலவே அளவற்ற பெருமை வாய்ந்த ஆழ்வாருக்கும் அவனைப் போலப் பேரும் பலபலவுண்டு. சிலவற்றைச் சொல்லி மகிழ்வோம். திருக்குருகூர் எம்பெருமானான ஆதிப்பிரான் (பொலிந்து நின்ற பிரான்) தனது அன்பின் மிகுதியால் ப்ரஸாதித்தருளின மகிழமலர் மாலையை தரித்து "நாட்கமழ் மகிழ் மாலை மார்பனு"கத் திகழ்ந்தமையால் **வகுளாபரணன்** (வகுளம் என்பது மகிழம்பூ) என்று பெயராயிற்று. பிறமதங்களாகிய யானைகளைத் தமது பிரபந்தங்களில் காட்டியுள்ள தத்துவார்த்தங்களான மாவட்டி (அங்குசம்) யால் அடக்கியதால் **பராங்குசன்** என்று பெயர் பெற்ருர். இவ்வாழ்வார் பிறந்தவுடனே அவரை நெருங்கவந்த சடம் என்றவாயுவை கோபித்தபடியால் சடகோபர் ஆனுர். பிறந்த பிறகு அழுதல், சிரித்தல் போன்ற எத்தன்மைகளும் இன்றி ஜடமாக, மாருத தன்மையுடையவராக இருந்ததனுல் **மாறன்** எனப்பட்டார்.

இவர் பிறந்தநாட்டின் தலைவர் என்பது பற்றி திருவழுதிவள நாடன் என்றும் குறிப்பதுண்டு. ஆழ்வார்களில் இவர் தலையாய்க் கொண்டாடப் படுவதால் அர்ச்சாஸ்தலங்களில் (கோவில்களில்) ஆழ்வார்களும் ஆசார்யர்களும் (அர்ச்சா மூர்த்திகள் என்ற கிரமத்தில்) இவரையே முதலில் எழுந்தருளப்பண்ணுவது எல்லா ஊர்களிலும் அநுஷ்டானத்தில் உள்ளது. திருவரங்கச் செல்வனான நம்பெருமாளே தமது அபிமானத்தினால் இவருக்கு இட்ட பெயர் நம்மாழ்வார் என்பது. ஸம்ப்ரதாயமுணர்ந்தோர் இவரை நம்மாழ்வார் என்றே அழைப்பர். பெயரேதும் சொல்லாமல் ஆழ்வார் என்றாலும் நம்மாழ்வாரையே குறிப்பதாகும்.

நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம் பிள்ளை
என்பர் அவரவர் தம் ஏற்றத்தால்—அன்புடையோர்
சாத்து திருநாமங்கள்தான் என்று நன்னெஞ்சே!
ஏத்து அதனைச் சொல்லி நீ இன்று.

என்பது மணவாளமாமுனிகள் திருவாக்கு. ஆழ்வாருடைய பெருமை எம்பெருமானது போலவே ஒப்பற்றது; சொல்லில் அடங்காதது.

(தொடரும்)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அநுபவ இலக்கியம்

'தீபம்' நா. பார்த்தசாரதி

பகவத் கீதையைப் பாரத நாட்டின்—பாரத தேவியின் சாதனை என்று கூறினான் மகாகவி பாரதி. கீதையை நீதி நூல் என்பதா, இலக்கியமென்பதா, அறநூல் என்பதா, அநுபவ வேதம் என்பதா? எந்தப் பேரால் அழைத்தாலும் அது கீதைக்குப் பொருந்தும் என்பதில் சந்தேகம் இல்லை. பெயர் எப்படியாயினும் நூல் ஒன்றே.

"போர்க் களத்தே பரஞான மெய்க்கீதை
புகன்ற தெவருடை வாய்?—பகை
தீர்க்கத் திறந்தரு பேரினள் பாரத
தேவி மலர்த்திரு வாய்"

இவ்வாறு பாரதமாதாவின் சாதனைகளைப் புகழ்ந்து மகாகவி பாரதி பாடியிருக்கிறான். கீதைக்கு மகாகவி தருகிற அடைமொழிகளைப் பாருங்கள். 'போர்க்களத்தே பரஞான மெய்க் கீதை' என்கிறான்.

கீதையின் மிகப் பெரிய சிறப்பு அந்த நூல் தோன்றிய இடமும் காரணமும் ஆகும். அர்ஜுனனுக்கு ஏற்பட்டது போன்ற தயக்கங்கள் உலகம் உள்ளவரை ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு காலத்திலும் ஏற்படக் கூடியவை. அப்போதெல்லாம் மனத்தைத் தெளிவுபடுத்தி எதிரே இருப்பதைத் தயக்கமின்றி உணர்ந்து உடனே செயல்பட வைக்கும் உடனடியான ஞானத்தைத் தருவது கீதையே ஆகும்.

மயக்கத்திலிருந்தும், தயக்கத்திலிருந்தும் தெளிவை உண்டாக்கி எழுச்சி பெற்றுக் கடமையை ஆற்றத் தூண்டுவது கீதை. தூண்டுபவன் கீதாசாரியன். இந்த அடிப்படையில் பார்த்தால்தான் பரஞான மெய்க்கீதை என்ற அடைமொழியின் ஆழம் புரியும். இந்நாட்டின் தலைசிறந்த தேசபக்தர்களான மகாத்மா காந்தி, திலகர் போன்றவர்களுக்கு இந்நாட்டின் இரண்டாவது குருக்ஷேத்திர யுத்தமாகிய சுதந்திரப் போராட்டத்தின்போது அத்தகைய எழுச்சியை அளித்ததும் கீதையே.

கீதை என்பது முழுமையான இந்தியத்தன்மை அமைந்த உலக இலக்கியம். அநுபவகிரந்தம். மனித மனத்தின் இருளை அகற்றுவது.

பகையைத் தீர்ப்பது ஒரு தலைசிறந்த கடமை என்று கூறும் இலக்கியம் பிறந்த தேசத்திலிருந்துதான் அஹிம்சா மார்க்கமும் பிறந்தது. அஹிம்சை வேறு, கையாலாகாத்தனம் வேறு. இரண்டுக்குமுள்ள வித்தியாசம் புரிந்தால்தான் கீதையின் சிறப்புப் புரிய முடியும். கண்ணன் என்பவன் நிரந்தர யௌவனமுடையவன். கீதை என்பது நிரந்தர ஞானச் சுரங்கம். ஒரு காலத்தே ஒருவனுக்கு ஏற்பட்ட அநுபவத்தினை ஒட்டித் தோன்றியதேனும் எல்லாக் காலத்தும் எல்லா மனிதருக்கும் ஏற்படும் அநுபவத்துக்கு மருந்தாக நிற்பது பகவத் கீதையாகும்.

ஞானசாரமாகவும், அநுபவமுக்தியைத் தருவதாகவும் உள்ள இந்நூல் பாரத நாட்டின் நிரந்தரச் செல்வங்களில் தலைமையானது.

காகுத்தன் கன்னிப்போர்

பேராசிரியர் K. A. மணவாளன் M.A. B.O.L.

கற்பாரிராம பிரானையல்லால் மற்றும் கற்பரோ? என்றார் நம்மாழ்வார். குணக்கடலான அந்த ராமபிரானின் இளமை வீரத்தைப் பற்றிச் சிறிது காண்போம். ராம லக்ஷ்மணர்களை அழைத்துக்கொண்டு விசுவாமித்திரர் காட்டு வழியே சென்றார். மூவரும் சரயூ நதியை அடைந்தனர். அருகேயிருந்த சோலையில் அன்றிரவு தங்கினார்கள். மறுநாட் காலை காமன் ஆசிரமத்தை அடைந்தனர். மன்மதன் தன் அங்கத்தை இழந்த தேசமாதலின் அத்தேசத்திற்கு அங்க தேசம் என்றும் பெயர் உண்டு. சோலைகளின் அழகை யெல்லாம் கண்டு களித்துச் சென்ற ராமலக்ஷ்மணர்க்குக் கொடிய சோதனை உண்டாகியது. சோலையைக் கடந்த அவர்கள் பெரிய பாலையைக் கடக்க வேண்டியதாயிற்று. பேய் உடல் பிளந்தாற் போன்ற கள்ளி மரங்கள் எங்கும் நிற்கின்றன. இலையுதிர்ந்த மூங்கில் புதர்கள் எங்கும் காணப் பட்டன. கதிரவனின் கிரணங்களைத் தாங்காது புரண்டு கொண்டிருக்கும் பெரிய பாம்புகள் ஒரு பக்கம். சூரிய வெப்பத்திற்கு ஆற்றாது நிழலைத்தேடி ஓடும் யானைகள் ஒரு புறம். காய்ந்து கருகிக் காகங்கள் வீழும் காட்சி ஒருபால். இத்தகை கொடிய பாலை வழியிலே பால் வடியும் பாலகர்கள் முனிவரைத் தொடர்ந்து நடந்து செல்கின்றனர். மலரினும் மெல்லிய ராமலக்ஷ்மணர் இவ்வெம்மையைத் தாங்க மாட்டார்களே என்று முனிவன் எண்ணினான். வெம்மை தோன்றாமைக்காக அவர்களுக்குப் பலை அதிபலை என்னும் இரண்டு அரிய மந்திரங்களை உபதேசித்தான். அம்மந்திர மகிமையால் அவர்கள் உள்ளமும் உடலும் குளிர்ந்தனர்.

பின்பு ராமபிரான் முனிவரை வணங்கி "சுவாமி இவ் வனம் இவ்வளவு வெப்பமாயிருப்பதற்குக் காரணம் யாதோ

என்று வினவினன். விசுவாமித்திர முனிவரும் இராமனை நோக்கி "பிள்ளாய்! உயிர்களைக் கொண்டு உண்டு வாழ்ப வளும், கொடிய எமனுடைய உருவத்தைப் போன்ற பயங்கர மான உருவத்தையுடையவளும், ஆயிரம் மதயானையின் பலத்தைப் பெற்றவளுமான ஒரு பெண்தான் இதற்குக் காரணம். அவள் வரலாற்றைக் கேட்பாயாக என்று கூறினன்.

தாடகை வரலாறு

"சுகேது என்பவன் பிரமனை நோக்கித் தவமியற்றி வரபலத்தால் ஒரு பெண்ணைப் பெற்றுன். பிரமன் அருளால் பிறந்த அப்பெண்ணை சுகேது, உரிய பருவத்தில் சுந்தன் என்பவனுக்கு மணஞ் செய்து கொடுத்தான். அவர்களுக்கு மாரீசன், சுபாகு என்ற இரு மைந்தர்கள் தோன்றினர். அம்மக்கள் இருவரும் மாயத்திலும் வஞ்சனையிலும் தன் தாயை விஞ்சியவர்களாக விளங்கினர். மக்களுடைய வலிமை யால் செருக்குற்ற சுந்தன் அகத்தியருடைய ஆசிரமத்திற்குச் சென்று மரங்களை வேரோடு வெட்டி வீழ்த்தி வேள்விக்கு இடையூறு செய்தான். வெகுண்ட அகத்தியரின் பார்வை யால் சுந்தன் சாம்பலானன். கணவனை இழந்த தாடகை ஓவென்று அரற்றி அழுது தன் குமாரர்களோடு அகத்தியனை அழிக்க எதிர்த்து வந்தாள். அகத்தியனும் அவர்களை நோக்கி "நீங்கள் தீமைகளைச் செய்ததால் அரக்கராகி அழிவீர்" என்று சாபம் கொடுத்தார். அகத்தியன் சாபத்தால் தாடகை சுபாகு மாரீசன் ஆகிய மூவரும் அன்றே அரக்கராயினர்.

பின்பு சுபாகு மாரீசர்கள் இராவணனை அடைந்து உறவு கொண்டாடி உலகில் உயர்ந்தவர்களை அழித்துத் தீமை செய்து வந்தார்கள். தாடகை அகத்தியரைப் பழித்துக் கொண்டு இந்த வனத்தையே தனக்கு இருப்பிடமாக அமைத் துக் கொண்டாள். அகத்தியரால் அரக்கியான இத்தாடகை பூமி முழுவதையும் பெயர்த்தெடுக்கும் வலிமை பெற்றுள். கடலைப் பருகவோ மேலுலகை இடித்துத் தள்ளவோ அவளால்

முடியும். பாவமே ஒரு பெண் உருப்பெற்று வந்ததுபோல இவ்வனத்தை வந்தடைந்தாள். பெரிய சூலாயுதத்தைக் கையிலேந்திய இவள் தாடகை என்று பெயர் பெற்ருள் என்ருர்.

இக்கொடிய அரக்கி மருதநிலங்களை அழித்துப் பாலை யாக்கினுள். இலங்கை வேந்தஞன இராவணனின் ஏவலை மேற்கொண்டு, யானை பலம் பெற்று என் யாகத்தினை அழிக்கின்ருள். இந்த அங்க தேசத்தில் வாழும் உயிர்களையெல்லாம் கொன்று தின்கின்ருள். பிரமதேவன் அனைத்து உயிர்களையும் இவளுக்காகவே படைத்ததாகக் கருதுகின்ருள்'' என்ருர்.

இராமபிரானும் தாடகையைக் காணவேண்டும் என்ற விருப்பத்தால் அவள் வசிக்கும் இடத்தைக் காட்டும்படி வேண்டினுன். ஆனல் அதற்கு முன் அத்தாடகையே பெரிய இடிபோன்ற முழக்கத்தை எழுப்பிக்கொண்டு, தீப்பற்றி எரியும் மலைபோலே எதிரே வந்து தோன்றினுள்.

செந்நிறமான மயிர்களையும், வெண்ணிறமான பற்களையுமுடைய இத்தாடகை சூலப்படையோடு எதிர்த்து வந்த போதும் அசைவற்றுச் சிந்தனையிலாழ்ந்திருந்த ராமன் மனக் கருத்தை அறிந்தான் விசுவாமித்திரன். 'ஆம்; இவள் பெண்ணல்லலோ! இவளைக் கொல்வது என் வீரத்திற்கு அழகோ, என்று எண்ணிய ராமனை நோக்கி, "பிள்ளாய்! இவளைப் பெண் எனல் பொருந்தாது. உலகத்திலுள்ள தீமைகளெல்லாம் ஒரு வடிவு கொண்டு வந்தது போல் வந்திருக்கிருள். முனிவர்களின் தவச் சாலைகளையெல்லாம் அழித்துத் துன்புறுத்தி வருகிருள். இக்கொடியவளையும் பெண் என்று கருத இடமுண்டோ? இந்திராதி தேவர்களையும் அசுரர்களையும் தோற்கடித்து, மந்தரமலை போன்ற பருத்த பெரிய தோள்களையுடைய இவளைப் பெண் என்று பார்க்கலாமோ? கொடுமை செய்யும் பெண்களைக் கொன்றழித்தல் அறமன்ருே!'' என்ருர்.

"ஸ்ரீராமன், ஐயனே இச்செயல் எப்படிப் பட்டதாயினும் தாங்கள் பணித்தால், உம்முடைய வாக்கை வேதமாகக்

கொண்டு நிறைவேற்றுவதுதானே அடியேன் கடமை. இதோ இப்பொழுதே இவளை வீழ்த்துகிறேன்" என்று வில்லில்நாணேற்றினன். அதே சமயத்தில் அக்கொடிய தாடகையும் திரி சூலப் படையை மிகவும் வேகமாக ராமன் மீது வீசினள். அச்சூலப் படையும் தீயைக் கக்கிக்கொண்டு சந்திரனை விழுங்க வருகின்ற ராகு போலே இராமன்மேல் பாய்ந்து வந்தது. அப்பொழுது ராமன் ஒரு பாணத்தைப் பிரயோகித்து தாடகையின் சூலத்தைப் பிளந்தான். கருநிறமுடைய தாடகையும் மலைகளையும் பெருங்கற்களையும் இராமன் மீது வீசிக் கல்மாரிபொழிந்தாள். அந்தக் கல்மாரியைக் காகுத்தன் தன் வில்மாரியால் விலக்கித் தடுத்து விட்டான். மேலும் முனிவர்களின் சாபச் சொல்லைப் போன்ற வேகமான ஒரு பாணத்தை, இருளே வடிவாய் விளங்கும் அத் தாடகையின் மேல் ஏவினன். அந்த ராமபாணமானது மேன்மக்கள் கீழோர்க்கு உபதேசிக்கும் உபதேசங்கள் அவர்கள் நெஞ்சிலே தங்காமல் போவதுபோல, வயிரக்கல் போன்ற உறுதியான அவள் மார்பிலே தங்காமல் ஊடுருவிச் சென்றது. இதனைக் கம்பர் மிக அழகாகக் கூறியுள்ளார்.

சொல்லொக்குங் கடியவேகச் சுடுசரங்கரிய செம்மல்
அல்லொக்கு நிறத்தினாள்மேல் விடுத்தலும் வயிரக் குன்றக்
கல்லொக்கு நெஞ்சில்தங்கா தப்புறங்கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற் றன்றே

பொன்மயமான மேருமலையைப் போன்று மிகவும் கம்பீரமாக விளங்கும் ஸ்ரீராமனுடைய பாணம் பட்டவுடனே ஊழிக் காலக் காற்றின் வேகத்தைத் தாங்க மாட்டாமல் மேகம் மின்னலோடு கீழே விழுவது போல் தாடகை கீழே விழுந்து இறந்தாள். தாடகையின் மார்பினின்று வழிந்தோடிய ரத்தவெள்ளமானது சிவந்த வானம் கீழே பொடித்து விழுவது போல் காணப்பட்டது. விசுவாமித்திரனுடைய ஆணையால் காகுத்தன் செய்து முடித்த கன்னிப்போரின் பெருமையை யாரே பகர வல்லார். ராவண பயத்தால் அரக்கர் உயிரைக் கவர அஞ்சியிருந்த யமனும் அச்சம் நீங்கிச் சிறிது அரக்கர் உயிரைச் சுவைக்கவும் தலைப்பட்டான். தேவர்களெல்லாம் மகிழ்ந்து காகுத்தன் கன்னிப்போரை வாழ்த்திப் பூமாரிபொழிந்து போற்றினர்கள்.

—o—

Sri

Srimathe Ramanujaya Namaha

Nirhetuka Krpa

Sri U. Ve. M.A.L. Thathachariar M A.

Among the scriptural passages that lay down the means to attain salvation the passage "Nayamatma Pravacanena labhyaha, na medhya, na bahuna srutena; Yamevaisha vrnute tena labhyaha tasyaisa atma vivrnute tanum swam" is considered to be most significant. All the earlier Acharyas have commented upon this passage and their opinions appear to differ regarding the purport of this passage. Broadly these opinions fall under two sections.

According to one section, this Upanishadic Passage lays down devotion or Bhakti as the means to attain salvation which is nothing other than the divine union with the Parabrahman, Lord Srimannarayana. Here Bhakti is said to be the means or Sadhana to attain that Parabrahman. The individual-aspirant should constantly struggle to accomplish this means. Unless there is volantary effort on the part of the individual-aspirant God will not be pleased with him and he bestows upon him the eternal abode only when he is pleased with his devotion which is practised as a means to get the highest aim of life.

Another section is of the opinion that this Bhakti which is practised as a means is quite insignificant and inefficient considering the object of our attainment viz , the unlimited Parabrahman who is the eternal abode of infinte virtues. Always the means should match with the end. So if Lord Narayana is the highest Purusartha to be attained then there can be no other means than Lord Narayana himself to attain him. Even here his Nirhetuka Krpa or causeless grace and compassion alone can lead us to his eternal abode. According to this school, Saint Nammalvar and the other Alvars who were ordinary individuals like us were liberated after obtaining the divine vision through the causeless grace of God.

Following the Ubhaya Vedantic Tradition of amskrita and Dravida Vedanta, these Acharyas uphold the school of Nirhetuaka krpa. This school considers that this Upanishadic passage is the best among all other Upanisadic passages because it clearly lays down that God's uncaused grace alone is the means to attain salvation. Now let us try to understand the true purport of this passage strictly acconding to the rules of interpretation.

This passage is found at the concluding portion of the second Valli of Kathopanisad. The preceding section of this passage deals with the greatness of Parabrahman and says that a person who realises him like this will not undergo any suffering. According to the present context the word Atma in the passage 'Nayamatma' etc, refers to Parabrahman only. So the first portion of this passage "Nayamatma pravacanena labhyaha, na medhya, na bahuna srutena." means that "this Parabrahman can

neither be obtained by constant contemplation nor by meditation, nor by hearing."

It is said in scriptures that Brahma vidya should be studied under the lotus feet of the great Acharyas. Even if one makes a systematic study of Brahma vidya under such Acharyas in accordance with the rules of study and contemplates upon the teachings of the Acharya, one cannot attain that Brahman unless Brahman himself desires to attain him.

The word 'Medha' refers to meditation of Brahman which is similar to actual vision of Brahman. A person with efforts may constantly mediate upon Brahman and be successful in obtaining his experience which is similar to perceptual experience. Even this medha or Constant meditation cannot be a means to attain that Brahman. It is said in the scriptures that God cannot be obtained by transient means (Nahyadhruvaih prapyate.) and The Eternal cannot be realised by the artifical means, (Nastyakrtah krtena).

Scriptural texts have laid down that He must be heard from many and He should also be heard many a times. (Bahubhyah srotavyam. Bahudha srotavyam) But even this hearing does not act as a means to attain salvation (Bahuna srutena na labhyah). This individual soul is an abode of the innumerable sins and bad deeds done in the past. Unless God who does not like the adoption of any other means chooses him the individual soul cannot attain the eternal abode of God.

So far the Upanisadic passage has made it clear that a person cannot attain the God by his own personal

efforts which are considered to be the means to attain him. Now the portion "Yamevaisa vrnute tena labhyaha" makes it clear that "that individual alone, who is chosen and blessed by god with the divine vision can attain him." Certain individuals are blessed by God and they get the divine knowledge only by the grace of God. This grace is not obtained through the performance of some means. So it is said in this passage that that individual alone who is chosen by God attain him. (Yamevaisa vrnute tena labhyah). To such an individual God reveals his own extraordinary form after giving him the divine vision.

This passage does not answer the question regarding the means of salvation but it says, only individual soul who is chosen by God alone will be able to attain him. Here the words Tena labhyah are very important because the word tena refers to the agent of attainment but not to the means. If at all Bhakti is a means to attain god it only acts as a requisite qualification of the individual chosen by god. The word 'Eva' in 'Tenaiva labhyaha' emphasises further, that there cannot be any other means to attain him but only that individual who is chosen by God can attain him. So it can be concluded that God cannot be obtained by any other means like Bhakti etc. On the other hand the causeless grace of god alone is the means to attain Him.

The Message of Sri Gitacharya

BY

Dr. M. NARASIMHACHARY, M.A. Ph-D.
Reader in Sanskrit, University of Madras

Srimad Bhagavadgita, often referred to as the **Gita,** is one of the Texts of the **Prasthanatraya** (the triple path), the other two being the **Upanisads** and the **Brahmasutra.** The Gita occupies a unique position in our cultural and spiritual heritage. The Upanisads being the earliest of the Prasthanas, form the culmination of the Vedic lore and the Gita, which is next in chronology, enjoys an equal status with them. The Brahmasutra of Badarayana tries to present a cogent system of Vedanta synthesising the Upanisadic teaching, which, by virtue of the **bheda, abheda** and **ghataka-srutis** (texts which speak of difference, non-difference and those which are reconciliatory in character), sometimes appears shrouded in ambiguity. Of these prasthanas, on which most of the systematisers of different schools of philosophy have commented according to their own line of thought, the Bhagavadgita stands out prominently, as a gospel of the ideal conduct of human life. The remarkable character of the Gita is that its language is simple and straightforward, its theme ennobling and elevating. It is the text of the common man, who has neither the scholarship nor mystic insight that are needed to understand the Branmasutra and the Upanisads. Having come from the lips of Lord Krsna, the most easily accessible and transcendental of all the avataras of Lord Visnu, the Gita offers solace and succour to the man when he needs them most.

Appearing in the Bhismaparvan (chs. 25-42) of the Mahabharata, the Bhagavadgita is divided into 18 chapters and runs to 700 slokas. Addressed to Arjuna by Lord Krsna on the plains of Kuruksetra (now in the state of Haryana), some 3100 years before the birth of Christ, the Gita/stands on an equal footing with the Upanisads[1] in providing answers to age old questions concerning human existence;

That it is called the "Gita" (sung) indicates its distinguished character, viz., its all-ennobling and extremely enchanting appeal. The credit of recording the dialogue between Lord Krsna and Arjuna goes to Vyasa, the author of the Mahabharata, who, according to some, is identical with Badarayana, the author of the Brahmasutra. The doubt that is often entertained is as to how could the Lord afford to give such a lengthy lecture of 700 verses on the battle-field, just as the battle was abont to commence.[2] The answer is that the Lord exhorted Arjuna to fight and discharge his duty without any fear or favour. This was the quintessence of Krshna-Arjuna-samvada. The chief message of the Lord could thus be summed up in a verse or two, while the entire bulk of the text of the Gita as it is available to us now, could have been added by Vyasa by way of explanation and interpretation of some knotty philosophical issues that were implied in the Lord's speech. Vedanta Desika points out that the actual text

1. *Cf. the colophons of all the chapters of the Gita: "iti srimadbhagavadgitasu upanishatsu" etc.*

2. *Cf. Gita I. 20 : "pravrtte sastra-sampare dhanur udyamya pandavaha"*

of the Gita commences only from verse 12 of the second chapter, the earlier portion being introductory in character.[3]

According to Swami Vivekananda, the main theme of the Gita is to rouse Arjuna to action, which can be summed up in the following verse :

> **"klaibyam ma sma gamah partha naitat tvayyupapadyate**
> **ksudram hrdayadaurbalyam tyaktva uttistha parantapa" (II.3)**

"O Arjuna! Do not become impotent. This does not behove you. Give up this faint heartedness and stand up."

Man is potentially divine but every often he forgets his real nature and feels himself to be weak and helpless. He has to be reminded of his real character. There is no room for any weakness or impotency in the scheme of God's creation. Everything, animate and inanimate, is but the expression of God's real nature, sometimes directly and sometimes indirectly. The Visistadvaita concept of sarira-sariri-bhava between the Supreme Being and the world of both animate and inanimate entities, is but a natural corollary to this all-embracing outlook of the truth of creation. The same fact has been explained by the Lord in the Vibhutiyoga of the Bhagavadgita, where everything in creation has been shown as partaking in the

3. *Vide Desika's commentary on Yamuna's Gi:arthasangraha.*

supreme splendour that is the Lord Himself.[4] The Lord's periodical manifestation on earth is meant only to enlighten the human beings about their real nature which often gets shrouded by their karmic influences of a beginningless nature, and to assure them of His ready help.[5] The paths of *karma*, *jnana* and *bhakti* which are mutually complementary are but different stages in the manifestation of the divinity within man.

The present magazine, aptly named "Sri Gitacharya" after the greatest spiritual teacher ever lived, viz., Lord Krsna, does, it is hoped, fulfil this ambition, viz., to rouse the thoughts of all men, women and children, of all sects and creeds, to realise the immanent principle in creation, viz., the Supreme Power, which, out of compassion, resides in several forms such as idols duly installed, and within the "inner temple" of one's own heart, and which can be always felt and resorted to. That this Supreme Power, out of compassion, took up the form of the victorious Parthasarathi in the Dvapara yuga, and has remanifested in the shrine at Tiruvallikkeni in Madras, should be a matter of great solace and cheer for all devotees. May Sri Gitacarya, Sri Venkatakrsna Bhagavan confer His choicest blessings for the success of the Journal that bears his santified name, dedicated as it is to spread His message of love and compassion to all men for all time to come.

4. *Vide x,41 : yad yat vibhutimat sattvam srimad urjitam eva va tattadeva avagaccha tvam mama tejomsa-sambhavam*
5. *Vide Iv.7,8 : yad yada hi dharmasya glanir bhavati bharata abhyutthanam adharmasya tada atmanam srjamyaham*
   paritranaya sadhunam vinasaya ca duskrtam dharmasamathapanarthaya sambhavami yuge yuge

வாங்கி விட்டீர்களா!

ஸ்ரீராமாநுஜ விஜயம்

ஸ்ரீராமாநுஜரைப் பற்றிய அனைத்து விவரங்களும் ஒருங்கே அடங்கிய புத்தகம்; சுமார் 400 பக்கங்கள் உள்ளது. ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல அடங்கியது.

வண்ணப் படங்களும், 50க்கும் மேற்பட்ட புகைப் படங்களும் அழகிய ஆர்ட் (Art) காகிதத்தில் கண்ணைக் கவரும் வண்ணம் அச்சிடப்பட்டுள்ளன.

20 ரூபாய் அடக்க விலையுள்ள இப்புத்தகம் **10** ரூபாய்க்குக் கிடைக்கிறது.

குறைந்த பிரதிகளே கைவசம் உள்ளன. உங்கள் பிரதிகளுக்கு உடனே முந்துங்கள்.

★

கிடைக்குமிடம் :

திருவல்லிக்கேணி

தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸபை

7, தெற்கு மாடவீதி, சென்னை-600005.

வைணவ ஸம்ப்ரதாயத்திற்கே உரிய தனிச்சிறப்பு அதன் தமிழ்மொழி இரண்டும் கலந்திருக்கும். அது மணிப்ரவாளம் போன்ற தமிழ்மொழியும் கலந்தது என்பது பொருள். இக்காலத்திலும் கட்டுரைகள் அல்லது அவர்களுக்கு எழுதப்படும் கடிதங்கள் முதலியன தூய (இயன்ற வரையில்) தமிழாக்கத்தையும் கீழே காணலாம்.

1ஸ்ரீஸ்வாமி 2ஸன்னிதியில் 3அடியேன் 4தண்டம் ஸமர்ப்பித்துச் செய்யும் 5விண்ணப்பம். 6தேவரீருடைய 7க்ருபையினால் 8அடியேன் இங்கு 9க்ஷேமமாக இருக்கிறேன். 10தேவரீருடைய 11திருமேனி 12பாங்கிற்கு 13ஸ்ரீமுகம் 14ஸாதித்தருள வேணும். 16தேவரீரை 17ஸேவித்துப் பலநாட்களாகிவிட்டன. 18ஸமீபத்தில் 19தேவரீர் இங்கு 20எழுந்தருளும் 21ஸந்தர்ப்பம் இருக்குமாகில் 22அடியேனுடைய 23குடிசைக்கும் 24எழுந்தருளி 25அடியேனையும் 26கடாக்ஷித்து 27தந்யனாக்க வேணும். 28தேவரீருடைய 29கோஷ்டியில் 30அந்வயிப்பதனாலேயே அடியேன் 31ஸத்தை பெற்றவனாகிறேன். எனவே தேவரீர் 32பல்லாண்டு பல்லாண்டு 33எழுந்தருளியிருந்து 34அடியோங்களை 35உஜ்ஜீவிப்பிக்க வேணுமாய் 36ப்ரார்த்திக்கிறேன். 37வாசகதோஷங்கள் 38க்ஷமித்தருள வேணும்.

39தாஸன்

....

பரிபாஷை எனப்படும் பாணி (Style) ஆகும். அப்பாணியில் வடமொழி எனப்படுகிறது. அதாவது மாணிக்கம் போன்ற வடமொழியும், பவளம் கல்யாணப் பத்திரிகைகள், ஸம்ப்ரதாய வித்வான்கள் எழுதும் இப்பாணியிலேயே இருக்கும். அம்மாதிரி கடிதம் ஒன்றையும் அதன்

1திரு சுவாமி 2திறத்தில் 3யான் 4வணக்கம் செய்து செய்யும் 5வேண்டுகோள். 6தங்களுடைய 7கருணையினால் 8நான் இங்கு 9நலமாக இருக்கிறேன். 10தங்களுடைய 11உடல் 12நலத்திற்கு 13கடிதம் 14விடுத்தருள வேணும். 16தங்களைப் 17பார்த்து பல நாட்களாகிவிட்டன. 18அருகாமையில் 19தாங்கள் இங்கு 20வரும் 21வாய்ப்பு இருக்குமாகில் 22என்னுடைய 23வீட்டிற்கும் 24வருகைதந்து 25என்னையும் 26நோக்கி 27பெருமை பெற்றவனுக்கவேணும் 28தங்களுடைய 29திரளில் 30கலந்து கொள்வதனாலேயே நான் 31உயர்வு பெற்றவனாகிறேன். எனவே தாங்கள் 32நீடூழி 33வாழ்ந்திருந்து 34எங்களை 35வாழ்விக்க வேணுமாய் 36வேண்டுகிறோம். 37சொற்குற்றங்கள் 38பொறுத்தருள்க.

39அடியவன்

....

கீதாசார்யன் வருகிறான் !

"சங்கரம்பாடி சுந்தரம்"

தாலாட்டு கேட்டும் தாய்மொழி கேட்டும்
மாலவனின் நாமம் மறந்த நமக்கு
சிராட்டும் குரலிலே சிறந்த குருவென
தேரோட்டி வருகிறான் கீதா சார்யன் !

வையகத்து விளக்காய் விளங்கும் வைணவம்
கையகத்து அமுதமாய் சுவைபட மாறிட
ஐயமெலாம் அகற்றி அருள்மொழி கூறிட
மையலோடு வருகிறான் கீதா சார்யன் !

அரைகுறை ஞானம் அடைந்து குழம்பி
வரைமுறை யான வேதம் மறந்து
கரையிலாக் கவலையில் சிக்கிய நம்முடன்
உரையாட வருகிறான் கீதா சார்யன் !

பொருளாயிரம் இருப்பினும் பார்தரும் சுகமெலாம்
கொடுங்கானல் நீரெனக் கண்முன் கண்டும்
திருமாலின் திருவருள் தேடிடா மனங்களில்
இருளகற்ற வருகிறான் கீதா சார்யன் !

★

ஏற்றோம் உறுதி

P. K. ரகுராமன்

எடுத்த காரியம் வெற்றி அமைந்திட!
எடுத்த ஜென்மம் முக்தி அடைந்திட!
தொடுத்த சொல்மாலை! போற்றி நின்பதம்பாடி!
கொடுப்பாய் தைரியம்! வெற்றி அடைந்திட!
பாண்டவர் துணையிருந்து தர்மம் காத்து!
பார்புகழ் கீதையின் ஆசார்ய னானீர்!
கார்வண்ணா! பரந்தாமா! நின்நாமம் பரப்பிட!
ஏற்றோம் உறுதி! இளைஞர்கள் நாங்கள்!
தன்னிறைவு பெற்றோம்! புதுமலர் பிறந்தது!
புதுமலர் தனிலே பாங்குடனே இருந்து!
மலரும் மலரெலாம் மணத்துடன் நீயிருந்து!
பலரும் அருள்பெற வருவாய்நீ விரைந்து!
பல்வண்ண மலர்தனை ஒன்றாய்க் குவித்தோம்!
எடுத்தோம்! தொடுத்தோம்! சூட்டினோம்! நின்நாமம்!
— அதுவே
கீதாசார்யன்! எனும் நின் திருநாமம்!

ஐப்பசி மாஸ உத்ஸவ விவரங்கள்

அக்.	ஐப்பசி	
17	—	துலாஸங்க்ரமண புண்ய காலம்
18	1	ஐப்பசி மாஸப் பிறப்பு
19	2	ஸ்ரீரங்கம் டோலோத்ஸவம் ஆரம்பம்
26	9	மணவாள மாமுனிகள் உத்ஸவம் ஆரம்பம்
30	13	தீபாவளி
நவ.		
1	15	திருவல்லிக்கேணி அன்னகூட உத்ஸவம்
4	18	மணவாள மாமுனிகள் சாற்றுமுறை
5	19	சேனை முதலியார் சாற்றுமுறை
7	21	பொய்கையாழ்வார், பிள்ளைலோகாசாரியர், சாற்றுமுறை
8	22	பூதத்தாழ்வார் சாற்றுமுறை
9	23	பேயாழ்வார் சாற்றுமுறை திருநாராயணபுரம் அஷ்டதீர்த்தம்
11	25	திருவிந்தளூர் கருடஸேவை

காளயுக்தி, தக்ஷிணாயணம், சரத்ருது, துலா மீ

அக். 78 / நவ. 78 — ஐப்பசி 1154-துலா மீ

18	1	பு	துவி 12-48, பர 22-19, தி 53-38
19	2	வி	திரு 13-40, கார் 24-57, தி 0,
20	3	வெ	சதி 15-52, ரோ 28-47, தி 7-30 43 55.
21	4	ச	பஞ் 19-11, மிரு 33-40, தி 56-40, அதிதி
22	5	ஞா	ஷஷ் 23-28, திருவா 39-23, சேஷ 0-40.
23	6	தி	ஸப் 28-21, புன 45-38, தி 12-30.
24	7	செ	அஷ் 33-32, பூச 52-5, தி 7-47.
25	8	பு	நவ 38-35, ஆயி 58-19, தி 27-24.
26	9	வி	தச 43-4, மக 60-0, தி 31-4
27	10	வெ	ஏகா 46-45, மக 3-49, தி 25-23
			ஸர்வைகாதசி.
28	11	ச	துவா 49-22, பூரம் 8-30, தி 27-34.
29	12	ஞா	திர 50-43. உத்ரம் 12-5, தி 33-54.
30	13	தி	சசி 50-47, ஹஸ் 14-25, தி 34-47,
31	14	செ	● 49-36, சித் 15 31, தி 29-30, ஸர்வ
			அமாவாஸ்யை.
1	15	பு	பிர 47-15, ஸ்வா 15-25, தி 29-9,
			கார்த்திக சுத்தம்
2	16	வி	துவி 43-52, விசா 14-16, தி 23-55
3	17	வெ	திரு 39-35, அனு 12-9, தி 25-28.
4	18	ச	சதி 34-39, கேட் 9-14, தி 28-5, சதி-வ்ர
5	19	ஞா	பஞ் 29-13, மூல 5-46, தி 1-46, 28-13.
6	20	தி	ஷஷ் 23-29, பூராட 1-54, உத்ரா
			55-57, தி 20-33
7	21	செ	ஸப் 17-38, திருவோ 53-46, 7-10, ஸப்-
			அஷ் திதித்வயம், ச்ர·வ்ர.
8	22	பு	அஷ் 11-50, அவி 49-53, தி 3-7,
9	23	வி	நவ 6-15, சத 46-24, தி 6-50.
10	24	வெ	தச 1-8 ஏகா 55-30 பூரட் 43-29 தி 1-37
11	25	ச	துவா 53-2, உத்ரட் 41-20, தி 6-37,
			ஸ்ரீ வை. உத்தானைகாதசி, க்ஷீராப்திநாத
12	26	ஞா	திர 50-24, ரேவ 40-9, தி 10-44. [பூஜை
13	27	தி	சசி 48-53, அசு 40-1, தி 30-2
14	28	செ	○ 48 38, பர 41-5, தி 4·27
15	29	பு	பிர 49 39, கார் 43-23, தி 12-14
			கார்த்திக பகுளம் ★
16	30	வி	துவி 51·56, ரோ 46 55, தி 25·44,
			கடைமுகம்.

எமது உளம் கனிந்த நன்றி

முதல் இதழும் வெளிவருவதற்கு முன்பே ஆயுள் சந்தா அளித்து எங்களை ஊக்குவித்து வரும்

1. ஸ்ரீ உ. வே P. B. அநந்தசாரியர்,
   அட்வொகேட், சென்னை—1.

2. ,, S. வெங்கடகிருஷ்ண பட்டாசாரியர்,
   பெரியமுறை அர்சகம், திருவல்லிக்கேணி
   ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி தேவஸ்தானம்,

3. ,, K. C. ஸம்பத், திருவல்லிக்கேணி,

4. ,, S. ஸதீஷ், திருவல்லிக்கேணி,

5. ,, K. ராமபத்ரன், தேனாம்பேட்டை,

6. ,, K. A தேவராஜன், சென்னை—1,

7. ,, நாதெள்ள ஆதிகேஸவுலு குப்தா,
   முன்னாள் தர்மகர்த்தா, திருவல்லிக்கேணி
   ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி தேவஸ்தானம்.

8. Smt. M. A. ஜானகி, திருவல்லிக்கேணி.

ஆகியோருக்கு எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் முதல் இதழ் வெளிவருவதற்கு முன்பே ஆண்டுச் சந்தா அளித்த அனைவருக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்

ஆஸ்திகரே!

இது சமயம், 'கீதாசார்யன்' முதல் இதழைப் படித்து மகிழ்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். (புதுமையாகச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில்,) பழமையான மணிப்ரவாள நடையிலே மட்டும் இல்லாமல், நமது விசிஷ்டாத்வைத கொள்கைகளை எளிய தமிழ் நடையில், எழுத ஆசைப்பட்டு, இப்பத்திரிகையை ஆரம்பித்திருக்கிறோம்.

ஒரு பத்ரிகையின் வளர்ச்சிக்கு வாசகர்களின் பேராதரவே ஊக்கமளிக்கும். குறிப்பாக, நமது பத்ரிகைக்கு இளைஞர்களின் ஒத்துழைப்பை வெகுவாக நாடுகிறோம்.

இப்பத்திரிகையில் பல சுவையான புதுமையான பகுதிகள் புகுத்தப்பட வேண்டுமென்ற அவா எங்களுக்குள்ளது. எத்தகைய புதுமைகளை மேற்கொள்ளலாம் என்று வாசகர்கள் தெரிவிக்க வேணுமாய் வேண்டுகிறோம். அதோடு மட்டுமல்லாமல், வைணவ கலாச்சாரத்தை மையமாகக் கொண்டு, வாசகர்களிடமிருந்து கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள், செய்திகள், வேடிக்கைக் கதைகள் முதலியன தமிழ் மொழியிலும், ஆங்கிலத்திலும் எதிர்பார்க்கிறோம். மேலும், இப்பத்திரிகையில் குற்றங் குறைகள் இருக்குமானால் பொறுத்தருளி, சுட்டிக்காட்டி திருத்திக் கொள்ள வாய்ப்பளிக்குமாறு மிகத்தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

எழுத வேண்டிய விலாசம் — 'ஆசிரியர், கீதாசார்யன், 7, தெற்கு மாடவீதி, சென்னை-600 005.

இது உங்கள் பத்ரிகை. வளர்க்க வேண்டியது உங்கள் பொறுப்பு எனக் கூறி, அடுத்த இதழில் உங்களை சந்திக்கும்வரை விடைபெறுகிறோம்.

Edited and Published by M. A. Venkata Krishnan and Printed at Guru Achagam, 19, Irusappa Gramani Street, Triplicane, Madras-600 005.